


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை அற்று.**

**பொருள் :** கூரியதாய்ச் சிறப்புற்று பல நூல்களைக் கற்று நுண்ணிதான அறிவு இல்லாதவனின் வளர்ச்சியும் அழகும், அழகுபெற அலங்கரிக்கப்பட்ட மண்பாவைக்கு ஒப்பாகும். (407)

**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு.**

**பொருள் :** கற்றாருக்கு நேர்ந்த வறுமையிலும் பார்க்க கல்லாதவனிடத்து உண்டாகிய செல்வம் அவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும். (408)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**திங்கட்சடையாய் எங்களையுடையாய் சிவனே ஓம்**



கல்லாப் பிழையுங் கருதாப் பிழையும் பொறுப்பாய் ஓம்
காலனைக் காலாற் றாக்கிய பரனே யரனே ஓம்
எல்லாஞ் செய்ய வல்லபம் உடையாய் எந்தாய் ஓம்
எழில்சேர் நல்லை வாழும் குருவே யிறைவா ஓம்
பொல்லா வினைகள் போகும் வண்ணம் புரிவாய் ஓம்
பூவார் மலர்கொண்டடியார் போற்றும் பொருளே ஓம்
எல்லா முன்செய லாமெனும் எண்ணந் தருவாய் ஓம்
ஏத்தும் நல்ல வடியரை யென்றுங் காப்பாய் ஓம் 03

மாறிப் பொறிவழி போகா மனத்தார் இனத்தாய் ஓம்
மாலோ டயனுங் காணா ஒளியே மணியே ஓம்
ஆறும் பிறையுஞ் சூடிய ஐயா மெய்யா ஓம்
ஆதியு மந்தமு மில்லாய் உள்ளாய் அறிவே ஓம்
தேறித் தெளிவார் சிந்தையி லூறும் அமுதே ஓம்
செயசெய வென்று பணியும் தேவர்கள் தேவா ஓம்
கூரிய சூலப் படையினை யுடையாய் கோவே ஓம்
கும்பிடும் நல்ல வடியரை யென்றுங் காப்பாய் ஓம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைமாத ஞானச்சுடர் மலர் வெளியீட்டுடன் கூடிய நிகழ்வுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 326

2025 பொருளடக்கம் மாசி


| | | |
|---|---|---|
| மகா சிவராத்திரி | கு. சோமசுந்தரம் | 01 - 04 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 05 - 07 |
| மனிதனுக்கு வினையை... | பு. கதிரித்தம்பி | 08 - 10 |
| திருக்கயிலாயம் | வி. செல்வரெத்தினம் | 11 - 13 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 14 - 15 |
| என் அலங்கல் அணிந்தருளே | முருகவே பரமநாதன் | 16 - 19 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 20 - 23 |
| சந்திக்க முந்து சண்டைக்கு... | மு. செல்லத்தம்பி | 24 - 26 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 27 - 29 |
| கந்தபுராணம்... | செ. சிவபாதம் | 30 - 32 |
| திருப்புகழைக் கற்றார்... | துரை. கணேசமூர்த்தி | 33 - 36 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 37 - 42 |
| நாத வடிவினனுக்கு... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 43 - 44 |
| உடலும் உள்ளமும் | இராம ஜெயபாலன் | 45 - 48 |
| திருவாசகத்துக்குக்... | கெ. சித்திரவேலாயுதம் | 49 - 52 |



**வருட சந்தா: 500/= (தபால் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டு வரும் தைமாத ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுரையினை ஆசிரியரும் சைவப்புலவருமான திரு சு. தேவமனோகரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் இம் மலரானது மாதம் ஒருமுறை நீண்டகாலமாக வெளி வந்துகொண்டிருக்கின்றதெனவும் வழமைபோலவே இந்த நூலிலே பல்வேறு சிறப்புக்கள் காணப்படுவதோடு அறிவுசார்ந்த, பக்திசார்ந்த, அருள்சார்ந்த நூலாக வெளிவருகின்றது.



சந்நிதியான் ஆச்சிரமம் என்றால் பல்வேறு துறைகளிலே வளர்ச்சியடைந்து பல்வேறு செயற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றது என்றும் தனியே யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இலங்கை முழுவதிலுமே இதனது செயற்பாடுகள் வளர்ந்து ஓங்கி நீண்டு செயற்பட்டுக்கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

எங்கே எங்கே தேவைகள் இருக்கின்றனவோ அந்தந்த இடங்களுக்கெல்லாம் தேடிச்சென்று தேவைகளை நேரடியாக இனங்கண்டு உதவியளித்துக்கொண்டிருக்கின்ற செயற்பாடு மோகனதாஸ் சுவாமிகளுக்கு சந்நிதிவேலவன் அளித்த அருள் ஆகும். வெள்ள அனர்த்த நேரங்களிலே இருந்தாலும் சரி, வறுமையில் வாடும் குடும்பங்களாக இருந்தாலும் சரி நேரடியாகச் சென்று பல்வேறு பணிகளைச் செய்துகொண்டு வருகின்றார்.

பக்திபூர்வமாகவும் சிறப்பாகவும் இந்த மண்ணிலே வாழ்க்கையை நல்லவண்ணம் வாழ்ந்து மற்றவர்களுக்கு சிறப்பான வழியைக்காட்டி நாமும் சிறந்த வழியைத் தேடிச் செல்வதற்கு செல்வச்சந்நிதி வேற்பெருமானுடைய அருளும், சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகளுடைய அருளாசியும் நிறைந்து எங்களுக்கும் உங்களுக்கும் எல்லோர்க்கும் நிறைவாக கிடைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வெளியீட்டுரைக்கு கடந்த வருடமும் தைமாதம் வந்திருந்தேன். அதேபோல் இவ் வருடமும் எனக்கு சந்தர்ப்பத்தை வழங்கிய ஆச்சிரம சுவாமிகள் அவர்களுக்கும் மற்றும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினருக்கும் நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீட்டுரை:**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டு வரும் தைமாத ஞானச்சுடர் மலரின் மதிப்பீட்டுரையினை ஓய்வுநிலை அதிபரான திரு ஆ. சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

இந்த உரை முருகப்பெருமானது திருவருளாலே கிடைக்கின்ற பெரும் பாக்கியமாக ஞானச்சுடர் மலருக்கு மதிப்பீடு செய்கின்றேன். முருகப்பெருமானது திருவருள் நிறைந்திருக்கின்ற இந்தப் பதியிலே எண்ணமுடியாத பல காரியங்களை முருகப்பெருமான் நிகழ்த்திக்கொண்டிருக்கின்றார். அன்னதானக் கந்தன் என போற்றப்படும் இப் பதியிலே 365 நாட்களும் அன்னதானம் நிகழ்த்துவது மாத்திரமல்லாமல் அன்னதானப் பணிக்கு மேலாக இந்த சமூகம் வாழ்வதற்காக, மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்பதற்காக இலங்கையின் சகல பகுதிகளிலும் சமயப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி, மருத்துவப்பணி, அனர்த்த முகாமைத்துவப்பணி என்றெல்லாம் பலவகையிலே பரந்துபட்டு செயற்பாடுகளை முருகப்பெருமான் மோகனதாஸ் சுவாமிகள் ஊடாக செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்.

அந்தவகையில் இந் நிகழ்வுகளை அனைவருக்கும் அறியப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் ஞானச்சுடர் என்ற பத்திரிகையை எந்தவித தடங்களுமில்லாமல் வழிநடத்திக்கொண்டிருக்கின்றார். அந்த வகையில் 325ஆவது மலர் வெளியிடப்படுகின்றது. சென்ற 03.07.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிவரை ஆச்சிரமம் ஆற்றிய பணிகள் தொடர்பாக விபரமாக விளக்கப்பட்டிருக்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

இம் மலரில் வருகின்ற கட்டுரைகள், கவிதைகளின் தரம் தொடர்பாகவும் விளக்கிக் கூறியதோடு, ஆச்சிரமத்தின் பணிகளின் முக்கியத்துவத்தில் ஞானச்சுடர் மலரின் மாதாந்த வெளியீடு என்பது முதன்மையானது எனவும் குறிப்பிட்டு தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில்



வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் 03 மாணவர்களுக்கு 145,000 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

யா/ துன்னாலை தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக வாகனத்தரிப்பிடம் அமைப்பதற்காக 150,000 ரூபா நிதி பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

முதியோர் சங்க ஆண்டுவிழாவில் நெட்டிலிப்பாய் கோயில்வீதி, கோண்டாவில் பகுதிகளைச் சேர்ந்த முதியோர்களைக் கௌரவிப்பதற்காக 25,000 ரூபா நிதி நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக 56,000 ரூபா பெறுமதியான பல் வைத்திய சிகிச்சைப் பிரிவுக்கான உபகரணங்கள் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

தொடர்ந்து சிறப்புப்பிரதி வழங்கலுடன் அன்றைய நிகழ்வு இனிதே நிறைவேறியது.

# கட்டுரையாளர் கவனத்திற்கு...

2020ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டுவரை வெளியீடு செய்யப்பட்ட ஞானச்சுடர் மலரில் வெளிவந்த ஆக்கங்களை வழங்கியோரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை கீழ்வரும் முகவரிக்கு 15.04.2025இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

**மலர்க்குழு:**

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை,**

**செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஆற்றங்கரை வேலவனின் அருளைப்பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்ற அருளாளர் வரிசையில் வைத்து மதிப்பிடக்கூடிய நடமாடும் தெய்வமாக வாழ்ந்து வழிகாட்டியவர்தான் முருகேசு சுவாமிகள்.



இவர் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி தர்ம வாழ்க்கையில் வழிப்படுத்தி ஆற்றிய தொண்டினை அவரின் காலத்தில் வாழ்ந்த பலரும் - இன்றும்கூட வியந்து பாராட்டி வாழ்த்தி நிற்பதைக் காதாரக் கேட்கிறோம்.

முருகேசு சுவாமிகளின் பெரு முயற்சியினால் 05.05.1995இல் ஆரம்பிக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் எந்தவித குறைவும் இன்றி நிறைவாக வளர்ச்சிபெற்று வருவது குறிப்பிட வேண்டியதாகும். சைவ சமயத்திற்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்த 63 நாயன்மார்களை நினைவுகூரும் "அறுபத்து மூவர் பூசையை" முதன் முதலாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் தோற்றுவித்த பெருமையும் முருகேசு சுவாமிகளுக்கே உரியதாகும். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகள் அத்தனைக்கும் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் அவர்.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள், சிறப்பான - நேர்த்தியான பூசை முறைகளை நெறிப்படுத்தியவரும் அவரே. 23.05.1920இல் அவதரித்த முருகேசு சுவாமிகள் 16.03.1997இல் இறைவன் திருப்பாதங்களைச் சென்றடைந்தார்.

04.04.2025 வெள்ளிக்கிழமை முருகேசு சுவாமிகளின் குருபூசைத் தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட கும்பாபிஷேகதின நிகழ்வு செல்வச்சந்நிதி ஆலயத்தில 31.03.2025 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் வங்கி சமூகத்தினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் நன்றி உரித்தாகுக!

மேற்படி தைமாத ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வில் கடந்த பல வருடங்களாக மக்கள் வங்கியில் பணியாற்றும் அன்பர்களினால் பெறப்பட்ட நிதியின்மூலம் சமணப்பிட்டி அறநெறிப் பாடசாலையின் கூரை சீர் வழங்கியதிலிருந்து இன்றுவரை வருடாவருடம் தைமாத சிறப்புப் பிரதியினால் வரப்பட்ட நிதியினைக் கொண்டு பலவிதமான சமூகசேவைப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நாம் பெருமைப்படுகின்றோம்.

இச் செயற்பாடுகளுக்கு முன்னின்று உழைத்த மக்கள் வங்கியினைச் சார்ந்த திரு சி. பத்மநாதன் அவர்களுக்கும், திரு வ. சண்முகநாதமுதலி, திரு தி. சிவகுமாரன் அவர்களுக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் மக்கள் வங்கி சமூகத்தினருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துத் தொடர்ந்து இச் செயற்பாடு மென்மேலும் பிரகாசிக்க சந்நிதியானை வேண்டி நிறைவு செய்கின்றோம்.

### தைமாதம் 2025 சிறப்புப்பிரதி பெற்ற மக்கள் வங்கியின் கிளைகளும் பங்களிப்பும்

| | |
|---|---|
| மக்கள் வங்கி இளைப்பாறியோர் | 102,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள் | 30,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதி உத்தியோகத்தர்கள் | 32,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள் | 37,500. 00 |
| மக்கள் வங்கி யாழ் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் | 6500. 00 |
| மக்கள் வங்கி யாழ் கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள் | 23,000. 00 |
| மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள் | 19,000. 00 |
| மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள் | 27,000. 00 |
| மக்கள் வங்கி தெல்லிப்பழை உத்தியோகத்தர்கள் | 14,000. 00 |
| மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள் | 22,000. 00 |
| மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள் | 8000. 00 |
| மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள் | 14,000. 00 |
| மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள் | 11,000. 00 |
| மக்கள் வங்கி ஊர்காவற்றுறை உத்தியோகத்தர்கள் | 11,000. 00 |
| மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள் | 12,000. 00 |
| மக்கள் வங்கி முல்லைத்தீவு உத்தியோகத்தர்கள் | 2000. 00 |
| மக்கள் வங்கி கிளிநொச்சி உத்தியோகத்தர்கள் | 4000. 00 |
| மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள் | 60,000. 00 |
| மக்கள் வங்கி மாங்குளம் உத்தியோகத்தர்கள் | 2000. 00 |
| மக்கள் வங்கி வவுனியா உத்தியோகத்தர்கள் | 2000. 00 |
| ஏனையோர் | 15,000. 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)
**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)
**த. ரவீந்திரகுமார்**
(உடுப்பிட்டி)
**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)
**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)
**க. குலசேகரம்**
(உரும்பராய்)
**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)
**திருமதி இ. பத்மநாதன்**
(கனன் போட்டோ, பருத்தித்துறை)
**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)
**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
**திருமதி T. பாக்கியம்**
(கந்தர்மடம்)
**நா. பவளம்**
(அச்சுவேலி)
**திருமதி சி. நாகேஸ்வரி**
(புத்தூர்)
**கணேசகுலசிங்கம் துஷிகரன்**
(அச்சுவேலி)
**க. பிந்துஷா**
(மீசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ. இராமலிங்கமூர்த்தி**
(இளை. உதவி மின் பொறியியலாளர், கரவெட்டி)

**சி. மகாலிங்கம் J.P**
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)

**சு. சிவதாசன் G.S**
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

**தலைவர், செயலாளர்**
(கலைவாணி ச.ச. நிலையம், தொண்டைமானாறு)

**உரிமையாளர்**
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)

**ஐ. லோகஞானம்**
(அஞ்சல் அதிபர், சுண்ணாகம்)

**ஆ. விஸ்வலிங்கம்**
(இளைப்பாறிய ஓவசியர், கல்வியங்காடு)

**திருமதி P. சிவபாலன்**
(அல்வாய்)

**கந்தசாமி தேவராணி**
(ஆனைக்கோட்டை)

**உரிமையாளர்**
(ஸ்ரீ முருகன் தொ.தொ. நிலையம், யாழ்ப்பாணம்)

**ஐ. சந்திரதேவன்**
(சுண்ணாகம்)

**செ. தேவேந்திரா**
(ஒஸ்காவீதி, உரும்பராய்)

**இராசரெட்ணம் வசந்தன்**
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)

**இ. குமாரதாசன்**
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)

**R. குலசிங்கம்**
(இளை. அதிபர், கோண்டாவில்)

**N.K. தங்கராசா**
(இளை. தபாலதிபர், புலோலி)

**இ. பாலகிருஷ்ணன்**
(முகமாலை)

**வ. முருகேசு**
(நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. புவிராஜ்**
(சண்டிலிப்பாய்)
**உரிமையாளர்**
(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)
**செ. செல்வரெத்தினம்**
(இளை. அதிபர், சுன்னாகம்)
**த. விவேகானந்தன்**
(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)
**இ. ஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
**மா. ந. பரமேஸ்வரன்**
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
**பா. கேதீஸ்**
(உரும்பராய்)
**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**க. சிவசுப்பிரமணியம்**
(கோண்டாவில்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
**வி.ந. ஸ்ரீதரன்**
(இளை. அதிபர், யாழ்ப்பாணம்))
**செ. செல்விகா**
(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியர் தெரு, கரவெட்டி)
**சு. நாகம்மா**
(சாவகச்சேரி)
**வே. சடாச்சரமூர்த்தி**
(கொடிகாமம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா. தேவநேரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சசிகரன் கௌதமன்**
(அச்சுவேலி)
**செ. பாலச்சந்திரன்**
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
**இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)**
(நெல்லியடி, கரவெட்டி)
**தி. பாலசுப்பிரமணியம்**
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
**மா. விஸ்வநாதன்**
(விஸ்வா மில், புத்தூர்)
**நாகன் கிருஸ்ணபிள்ளை**
(கோண்டாவில்)
**சி. கந்தையா**
(சுன்னாகம்)
**K. விஷ்ணுமோகன்**
(உரும்பராய் கிழக்கு)
**பொ. சிற்றம்பலம்**
(கொடிகாமம்)
**பா. சிவபாக்கியம்**
(கைதடி)
**சிதம்பரநாதன் ஸ்ரீகரன்**
(புத்தூர்)
**நாகராசா சாந்தி**
(அச்சுவேலி)
**க. ரட்ணேஸ்வரன்**
(இளை. அதிபர், சங்கானை)
**து. பிரபாசன்**
(மானிப்பாய்)
**திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி செல்வநாயகம்**
(வடலியடைப்பு)
**திருமதி சீதாதேவி இந்திரன்**
(யா/ கச்சாய் மகா வித்தியாலயம்)
**உரிமையாளர்**
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

## உலகத்துக்குக் கருத்தா யாவர்?

பிரம்மா, விட்டுணு ஆகியோர் தொடக்கம் மனிதர்கள் வரை இந்த முக்கியமான வினாவுக்கு உரிய விடையைத் தேடி ஆராய்ந்துள்ளனர். இதற்குரிய விடையை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தாம் இயற்றிய முதலாம் சைவ வினா விடையில் முதல் வினாவாக எழுப்பி உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான் என்ற விடையை ஐயந்திரிபறத் தந்துள்ளார்.

உலகத்துக்குக் கருத்தா யாவர்? என்ற வினாவும், அதற்குரிய மிகச் சரியான விடையும்; ஆழமான கருத்தைக் கொண்டவை. அக் கருத்து வேதாகமங்களின் சாரமாக அமைந்திருக்கின்றது.



ஒரு காலகட்டத்திலே தேவர்களுட் சிறந்தோராகிய பிரம்மா, விட்டுணு ஆகியோரால் இம் முக்கிய வினாவுக்கு விடை ஆராயப்பட்டது. படைத்தல் கடவுள் பிரம்மா; விட்டுணு காத்தல் கடவுள். ஒருமுறை இவ்விடயம் பற்றி அவ்விருவர்களுக்குமிடையில் ஒரு சொற்போர் நடந்தது.

பிரம்மா இவ்வுலகத்தைப் படைத்தவர் தான் என்றும் அதனால் இவ்வுலகுக்குக் கருத்தா தானே என்றும் கூறி அகங்கரித்தார். அதற்கு விட்டுணு பதிலுக்குப் பிரம்மா படைத்த உலகம் அழிந்துவிடாமல் காப்பவன் தானே; அதனால் காத்தல் கடவுளாகிய தானே உலகத்துக்குக் கருத்தா என்று கூறி அகங்கரித்தார்.

இப்பொழுது இரண்டு கர்த்தாக்கள்; "நான், நான்" என்று தோன்றி விட்டார்கள். இருவர் முரண்பாடு போர் ஆக உருவெடுத்தது. பெரும் யுத்தமாக

மாறியது. நீண்டகாலம் தொடர்ந்தது. உலகம் நடுங்கியது; உயிர்கள் கலங்கின. அந்நேரத்திலே நாரத மகாமுனிவர் யுத்தகளத்திற்கு வந்து பிரம விட்டுணுக்களை நோக்கி, "உங்களுக்குப் படைத்தல், காத்தல் தொழில்களை வழங்கி அவ் உயர் பதவிகளில் அமர்த்தியவர்; நியமனம் உபகரித்தவர் யாவர்? அப் பெருமான் உங்களிலும் பெரியவர், மேலானவர்தானே! அவரை மறந்துவிட்டீர்களா? அவரே உலகத்துக்குக் கருத்தா" என்றார்.

நாரதரின் விடையை பிரம்மாவும் விட்டுணுவும் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் இருவரிடமும் குடிகொண்டிருந்த அகந்தையும் மமதையும்தான். இருவரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்காமல் போரை மீண்டும் தொடங்கி முன்னரிலும் மூர்க்கமாக நடத்தினர்.

அப்பொழுது, இருவருக்கும் மத்தியில் ஒரு பெரும் சோதி தோன்றியது. அது ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியாக அமைந்திருந்தது. அதன் அடியுந் தெரியவில்லை; முடியும் காணமுடியவில்லை. யுத்தம் புரிந்த பிரமாவும் விட்டுணுவும் திகைத்தார்கள். அவ் வேளை, நாரதர் மீண்டும் அங்கே தோன்றி இச் சோதியின் அடியையும் முடியையும் தேடிக் கண்டுபிடியுங்கள். உலகத்துக்குக் கருத்தா யாவர் என்பது தெரியும் என்றார்.

விட்டுணு பன்றி வடிவெடுத்து சோதியின் அடியைத் தேடத் தொடங்கினார். பிரமா அன்னத்தின் வடிவெடுத்து மேலே பறந்து சென்று முடியைத் தேடிக்காண முயன்றார். இருவரின் முயற்சியும் பயனளிக்கவில்லை. வேதங்கள் முதலிய வடமொழிச் சாத்திர நூல்கள் அவர் களைப் பார்த்து எள்ளிநகையாடின. பிரம விட்டுணுக்கள் நாணித் தலை குனிந்தனர். ஈற்றில் உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான் ஒருவரே என்பதை இருவரும் ஒப்புக் கொண்டார் கள். தமது அறியாமையை மன்னித்தருளும்படி இருவரும் முழுமுதற் கடவுளாகிய சிவபெரு மானைப் பிரார்த்தித்தார்கள். அப்படி அவர்கள் உலகத்துக்குக் கருத்தா சிவபெருமானே என்பதை ஒப்புக்கொண்டு சிவனைப் பிரார்த்தித்த புனித தினமே சிவராத்திரி புண்ணிய தினம்.

பிரமா, விட்டுணு ஆகியோர் செருக்கு அடங்கிச் செய்த பிரார்த்தனையை ஏற்று ஆதியும் அந்தமும் இல்லாத சோதி வடிவம் சுருங்கி அருணாசல மலையாயிற்று. அத்தினம் அவர்கள் கேட்டுக்கொண்டபடி மகாசிவராத்திரி புண்ணிய தினமாக விரதம் அனுஷ்டித்து பக்தியோடு சிவபெருமானுக்கு விழா எடுத்து கொண்டாடப்பட்டு வருகின்றது.

சிவபரத்துவம் ஆழ்ந்து, அகன்று, பரந்து, ஓங்கி உயர்ந்து உள்ள மிகப் பெரிய தத்துவம்.

**சிவம் - பரப்பிரமம் - நிருபணம்**

பிரம்மா, விட்டுணு இருவரும் சோதியின் அடி, முடி தேடிய நிகழ்வின் மூலம் சிவம் ஒன்றே பரப்பிரமம், பரம்பொருள் என்பதுடன் சிவத்தின் பரத்துவமும் நிறுவப்பட்டுள்ளது. சிவம் நிலையானது; "ஆக்கம், அளவு, இறுதி" இல்லாதது சிவம். "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்"; அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு - அது சித்துப்பொருள். அத்துடன் அது நிலையான சத்துப்பொருள். "விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய்; எண்நிறைந்து எல்லை இலாதானே" இவ்வாறு மாணிக்கவாசகர் சிவபரத்துவத்தை விவரிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபரத்துவம் பற்றிச் சைவ சமயக் குரவர்கள்

"எல்லா வுலகமு மானாய் நீயே"
-திருநாவுக்கரசர்.

"விண்ணாகி நிலனாகி விசும்புமாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவநின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்தவாறே"
-திருநாவுக்கரசர்.

"பிரமன் அரி என்று இருவரும் தம் பேதமையால்
'பரமம், யாம் பரம்' என்றவர்கள் பதைப்பு ஒடுங்க
அரனார் அழல் உருவாய், அங்கே அளவு இறந்து
பரம் ஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ"
-மாணிக்கவாசகர்.

"அத்தனே! அண்டர் அண்டம் ஆய் நின்ற
ஆதியே! யாதும் ஈறு இல்லாச்
சித்தனே! பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே! சிவபெருமானே"
-மாணிக்கவாசகர்.

"மாலாகி நான்முகனாய் மாபூ தமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கும் எல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்களாய்ப் புராணன்தானே யாகி
ஏலா தனவெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே"
-திருநாவுக்கரசர்.

"நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினொடு காற்றாகி நெடுவானாகி
அற்பமொடு பெருமையுமாய் அருமையாகி
அன்புடையார்க் கெளிமையதாய் அளக்கலாகாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பரமாய் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே"
-திருநாவுக்கரசர்.

இவ்வாறு சைவ சமயக் குரவர்கள் அனைவரும் சிவபரத்துவம்பற்றி, ஒத்த கருத்துடையவர்களாக உள்ளமை நோக்கற்பாலது. சர்வமும் சிவமயம் ஆகக் கண்டு, உணர்ந்து, வெளிப்படுத்தியவர்கள் சைவசமயக் குரவர்கள். "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே; பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என்பது மணிவாசகம். பழமைக்குப் பழமையாய்; புதுமைக்குப் புதுமையாய் விளங்குபவர் சிவபெருமான். "பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரன்" என்னும் மணிவாசகப் பெருமானின் மணிமொழி சிவபரத்தின் மகிமையைக் கோடிட்டுக் காட்டுகிறது.

### சர்வம் சிவமயம்

சிவம் என்னும் செம்பொருள்; ஒப்பற்ற பரம்பொருள், முதல் பொருள், மூலப்பொருள், மெய்ப்பொருள்; சிவம் என்றும் உள்ளது, எங்கும் நிறைந்தது, எல்லாம் அறிவது, எல்லாம் வல்லது எனச் சிவப்பரத்துவம் மகிமைப்படுத்துகிறது.

அங்கிங்கெனாதபடி எங்கும் சிவப்பிரகாசமாய்; நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து; அருளொடு இணைந்து; ஆனந்தமயமாகி; தன்னருள் வெளிக்குள்ளே அண்டங்கள் அனைத்தையும் அடக்கிக்கொண்டு; உயிருக்கு உயிராய் விளங்கி; மனம், வாக்கு, காயம் ஆகியவற்றிற்கு எட்டாது; யாதினும் வல்லதொரு சித்தாகி; என்றும் ஆனந்தமாய்; யாதொன்றையும் பற்றி நிற்காமல்; சர்வ சுதந்திரராய்; பழமும் சுவையும்போல; நெருப்பும் சூடும்போல விளங்கும் பரம்பொருள்தான் சிவம் ஆகும்.

கடவுள் என்ற சொல்லில்; கட+உள் என்னும் இரண்டு சொற்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. "கட" என்பது, மனம் மற்றும் புலன்களைக் கடந்த நிலையைக் குறிக்கின்றது. "உள்" என்பது எமக்குள்ளே உயிர்க்குயிராய் நிற்கின்ற நிலையைக் குறிக்கின்றது. சிவபெருமான் எம்முடன், ஒன்றாய், உடனாய் அதேவேளை வேறாய் உள்ள ஒரே பரம்பொருள் என்கிறது சைவசித்தாந்தம். சிவபெருமான் சைவசமயத்தின் முழுமுதற் கடவுள்.

---

**காத்திட வேலாகிச் சந்நிதியில் நிற்பவன் முருகன்**

வேண்டிடும் வரம்தர ஓடிவருவான் வேலன்
வேதனை துயர்கெட நாடி அருள்வான்
நீண்டிடும் துயர்தீமை நீக்கிக் களைவான்
நிம்மதி வாழ்வுபெற மயில் ஏறிவருவான்
தாக்கிடும் தீமையாவும் பொடியாக்குவான்
தம் அடியார் குறைகேட்டுத் தானருள்வான்
பா கொண்டு அவன்பாதம் பணிவோர்க் கெல்லாம்
பசிநீக்கி நோய்நீக்கிக் காத்து அருள்வான்.

-சின்னப்பு தளையாலசிங்கம்

*முடியும் என்று நம்புவோருக்கு எதுவும் முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 15

(தொடர்ச்சி...

## குறிக்கோளும் அதனை அடையும் வழியும்

- திரு பூ. சோதிநாதன் அவர்கள் -

### 06) பலனில் பற்றின்மை

"பரவாயில்லை. அதுவும் கூட நல்லதே" என்று பகவான் கூறுகின்றார். "உனது கடமையை நிறைவேற்றும் பொறுப்பு இருக்கும்பொழுது அதன் பலன்களை எதிர்பார்ப்பது சரியன்று. ஆதலால் பலன்களை எதிர்பார்த்து எந்த நோக்கத்தோடும் வேலை செய்யாதே. முந்திய அத்தியாயங்களில் சிறப்பாக மூன்றாவது அத்தியாயத்திலும், பின்பு பதினெட்டாம் அத்தியாயத்திலும் இவ்விடயம் மிக விவரமாக விளக்கப்பெறுகிறது. "உனது கட்டுப்பாட்டில் இல்லாத பல காரணிகளினால் ஒரு செயலின் பலன் நிர்ணயிக்கப்பெறுகின்றது. ஆதலால், நீ செய்யும் எந்த ஒரு வேலைக்கும் குறித்த ஒரு பலனை எதிர்பார்க்கும் உரிமை இன்றி அந்த வேலையைச் செய்யவே உனக்கு உரிமை உண்டு. எனவே உனது செயல்களின் பலனைக் கடவுளுக்கு அர்ப்பணி. அத்தோடு இவ்வுலகில் செயல் செய்வதற்கு உன்னை ஈடுபடுத்திக்கொள். உண்மையான கர்மயோக உணர்வோடு உனது வேலைகளையும் கடமைகளையும் நிறைவேற்று. அத்துடன் ஓர் இலட்சிய புருஷனாக இரு. வெறுக்கவும் அன்பு செய்யவும் வேண்டியதில்லை".

### 07) உண்மையான பக்தன்

நடைமுறையில் எதனையும் சாராது வாழும் ஓர் உண்மையான பக்தனின் பண்புகளை விவரமாகக் கூறிப் பன்னிரண்டாம் அத்தியாயத்தின் இறுதிச் சுலோகங்கள் செல்கின்றன. அந்த பக்தன் எதையும் தனது என்று கருதுவதில்லை. அன்பு அல்லது வெறுப்பு என்ற வடிவத்தில் எதற்கும் சாதகமாகவோ பாதகமாகவோ அவன் பற்றுக்கொள்வதில்லை. அவன் எது தானாக வந்து அமைகிறதோ அதனை ஏற்றுக்கொள்கிறான். அவன் தானாக எந்த ஒரு முயற்சியையும் ஆரம்பிப்பதில்லை. தான் ஈடுபடும் எதிலும் அவன் சுயநலம் இல்லாதவன். இயன்றளவு தன்னை முன்னிறுத்தாத ஒரு வாழ்க்கையை அவன் மேற்கொள்ளுவான். அவனது நடத்தை மற்றைய மனிதர்களை விலக்காது. அதாவது அவனது நடத்தை மற்றவர்களில் இருந்து விலகித் தனது சொந்த நலனுக்குக் காரணமாக இருக்காது. எதிலிருந்தும் நாம் விலகி ஒதுங்குவதோ எம்மிலிருந்து மற்றவர்கள் விலகி ஒதுங்குவதோ இல்லாத ஒரு வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு கருத்து இங்கு எமக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவைக்கப்பெறுகிறது. அது ஒரு இலகுவான அலுவலல்ல. ஒரு தெய்விக மனிதன் மட்டுமே அவ்வாறு வாழ முடியும். ஆனால் இது கடினமாக இருக்கும். அதேவேளை அந்த இலட்சியத்தை எமது குறிக்கோளாகக் கொண்டு நம் இதயங்களில் அதனை விரும்புவது எங்களைப் பொறுத்ததாகும். கடவுளின் இருப்பில் ஆழமாக வேரூன்றிய ஒருவனுக்கு இன்பமும் துன்பமும், புகழும் இகழும் சமமாகவே இருக்கும். அத்துடன் அவனது தேவைகளைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்புக் கடவுளுடையதாகும். அவனே மிகப்பெரிய பக்தனாவான். இந்த அருள்மொழியோடு கீதையின் பன்னிரண்டாம் அத்தியாயம் நிறைவுபெறுகிறது. மேலும் தொடரும் கீதையின் போதனைகள் முற்றும் வித்தியாசமான ஒரு முறையில் செல்கின்றன. அங்கு சில தத்துவக் கருத்துக்களும் உளவியல் கருத்துக்களும் இடம்பெறுகின்றன. அவை யோகப் பயிற்சியின்போது சந்திக்கும் விடயங்களாகும். பெரும்பாலும் முன்னைய அத்தியாயங்களில் விவரித்த முறையிலேயே அவை செல்கின்றன.

## 08) இறுதி ஆறு அத்தியாயங்கள்

கீதையின் இறுதி ஆறு அத்தியாயங்களும் அதன் பிரதான விடயத்துக்கு ஒரு பின்னணிபோல அமைகின்றன எனக் கீதை வியாக்கியாகாரர்கள் கருதுகின்றனர். கீதையின் பிரதான விடயம் அதன் பதினோராவது அல்லது பன்னிரண்டாவது அத்தியாயத்தோடு நிறைவெய்துகிறது. ஆனால் வேறு சிலர் முந்திய பன்னிரண்டு அத்தியாயங்களிலும் மிக முக்கிய பயிற்சிக்கு உரிய நடைமுறை அழுத்திக் கூறப்பெற இறுதி ஆறு அத்தியாயங்களிலும் தூய தத்துவக் கருத்துக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன எனக் கருதுகின்றனர். அது எப்படி இருப்பினும் இறுதி ஆறு அத்தியாயங்களும் தமது வழியில் முக்கியமானவையே. ஏனெனில் முந்திய அத்தியாயங்களில் அங்கும் இங்கும் தொட்டுக் காட்டப்பெற்ற சில சிக்கலான பிரச்சனைகள் அந்த ஆறு அத்தியாயங்களிலும் விளக்கப்பெறுகின்றன.

## 09) அத்தியாயம் பதின்மூன்று

பதின்மூன்றாவது அத்தியாயம் புருஷன், பிரகிருதி என்று அழைக்கப்படும் தத்துவங்களைத் தனது போதனையில் விளக்குகிறது. இவற்றை நாம் பிரக்ஞை, சடம் என்றோ அகம், புறம் என்றோ கூறலாம். இவை இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பு புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும். அங்கு கூறப்பெறும் தத்துவம் பெரிய முக்கியம் உடையதில்லை. ஆனால் பிரக்ஞை, சடம் என்பவற்றுக்கிடையே உள்ள தொடர்புபற்றிய ஆய்வு முக்கியமானதாகும். புருஷன் என்பது எல்லா இருப்புக்களினதும் ஆன்மாவாகும். அத்துடன் கடவுள் தன்னை இந்த ஆன்மாவோடு இனங்காணுகின்றார். இங்கு மிகப்பெரும் அவதாரமான கிருஷ்ணன் என்ற வடிவில் அக் கடவுள் உள்ளார். அறிபவர் அகமாகும்; அறியப்படுவது புறமாகும். அது க்ஷேத்திரம் எனப்படும். பிரக்ஞையின் செயற்பாடான க்ஷேத்திரமே இந்த முழுப் புறத்தோற்றப்பாடும் ஆகும். செயல் நிகழுமிடம் க்ஷேத்திரம் ஆகும். அந்தச் க்ஷேத்திரத்தை இயக்குபவர் க்ஷேத்திரக்ஞர் ஆவர். க்ஷேத்திரத்தை அறிபவர் கடவுளாவர்.

*எதிர்ப்பு இல்லையென்றால் வாழ்வில் ஏற்றமே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா இருப்புக்களிலும் உள்ள ஆன்மா எல்லாத் தனிமனிதர்களிலும் பிரசன்னமாக உள்ளது. அது உன்னிடத்திலும், என்னிடத்திலும், எல்லாவற்றிலும் உள்ள அகமாகும். அதேவேளை அதுவே பிரபஞ்சத்தின் அகமாகவும் இருக்கின்றது.

## 10) வேறுபாட்டைப் புரிவது

"ஒரு க்ஷேத்திரத்தில் மட்டுமன்றி எல்லாச் க்ஷேத்திரங்களிலும் உள்ள அறிபவர் நானே" எனது உடலிலுள்ள ஆன்மா இந்த உடம்பில் மட்டும் அடைபட்டுள்ளது அன்று. அது எல்லா உடம்புகளிலும் ஒரேமாதிரியாயுள்ள ஆன்மாவாகும். எனவே க்ஷேத்திரத்துக்கும், அதனை அறிபவருக்கும், அறிவின் இயல்புக்கும், அறிவின் இலக்குக்கும் இடையே உள்ள வேறுபாட்டை புரிந்துகொள்வது முக்கியமாகும். இவைதான் கீதையின் பதின்மூன்றாம் அத்தியாயத்தின் கருத்துக்கள் ஆகும். காணும் மனிதனான அகம் அல்லது பொருள்களை அவதானிக்கும் பிரக்ஞை உடல் - உளத் தொகுப்பாகும்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களைக் கொண்ட இந்த உடலும், அதன் உள்ளே மனதால் இயக்கப்பெறுவதும், புத்தியின் கருவியால் தொழிற்படுவதும், ஆவல்களோடு நிரம்பியதும் அகம் ஆகும். இங்கு சாங்கியப் பிரபஞ்ச இயல் தத்துவங்கள் குறிக்கப்பெறுகின்றன. அதாவது அகங்காரம், மஹத் (புத்தி), அவ்யக்தம் (பிரகிருதி) என்ற தத்துவங்கள் குறிக்கப்பெறுகின்றன. இவற்றையும் ஐம்பூதங்களையும் சேர்த்தால் பிரபஞ்ச-அடுக்கமைப்பு நிறைவு பெறுகிறது. இதே தத்துவங்களோடு பத்துப் புலன் கருவிகளையும், மனதையும் ஒரு தனிமனிதன் அடக்கியுள்ளான். ஒரே சமயம் உடலாகவும் உளமாகவும் உள்ள இத் தனிமனித அமைப்பு மனதையும் உடலையும் பிரிக்கமுடியாதபடி தொடர்புபடுத்துகிறது. அநுபவமாக அறிபவர் அந்தத் தனிமனிதரே ஆவர். அத்துடன் அறிபவர் அறிவை வைத்திருக்கும் ஒருவரும் ஆவர். மேலும், எது சரியான அறிவு, அதற்கு எதிரானது எது என்பவையும் தொடர்ந்து குறிக்கப்பெறுகின்றன. (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் | 07 | மாசி | 23 | வெள்ளி | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| மார்ச் | 14 | மாசி | 30 | வெள்ளி | திருவள்ளுவர் |
| மார்ச் | 18 | பங் | 04 | செவ்வாய் | காரைக்காலம்மையார் |
| மார்ச் | 27 | பங் | 13 | வியாழன் | பரமகுரு சுவாமி |
| மார்ச் | 29 | பங் | 15 | சனி | குழந்தைவேற் சுவாமி |
| மார்ச் | 31 | பங் | 17 | திங்கள் | செல்லப்பா சுவாமி |
| ஏப்ரில் | 04 | பங் | 21 | வெள்ளி | நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் முருகேசு சுவாமிகள் |
| ஏப்ரில் | 07 | பங் | 24 | திங்கள் | யோகர்சுவாமி |
| ஏப்ரில் | 23 | சித் | 10 | புதன் | திருநாவுக்கரசர் |
| ஏப்ரில் | 28 | சித் | 15 | திங்கள் | சிறுத்தொண்டர் |
| ஏப்ரில் | 30 | சித் | 17 | புதன் | மங்கையர்க்கரசியார் |

*எல்லாம் தெரியும் என்று குழப்பத்தோடு இருக்காதே. எதுவும் தெரியாது என்று தெளிவோடு இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனுக்கு வினையை ஒழிக்க உகந்த இடம் ஆலயம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவன் உலகத்தையும் உயிரினங்களையும் படைக்கின்றான். ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினங்கள் முன் வினைப்படி வாழுகின்றன.

இறைவன் படைப்பில் ஆறறிவுடையவனாக மனிதன் திகழ்கின்றான். இவன்தான் கோவில்களையும் பராபரிக்கும் திறமை உடையவனாக இருக்கின்றான். இறையருள் கிடைக்க கோயில்களைக் கட்டுகின்றான். எங்கும் கோயில்கள் கட்டப்பட்டு வளர்ச்சியடைய வழிபடும் மனிதனுக்கு திருவருள் கிடைக்கின்றது. திருவருளைப் பெற்ற மனிதன் இறைவனை அடையும் வழியைக் கண்டுகொள்வான். எனவே மனிதனுக்கு கோயில் மிகவும் அவசியம் என்ற உணர்வை பெற்றுக்கொள்ளுகிறான்.

ஒரு நாட்டுக்கு ஆலயம் முக்கியமென்பதை திருநாவுக்கரசு நாயனார் பின்வரும் பாடல்மூலம் விளக்குகின்றார்.

"திருக் கோயில் இல்லாத திருவிலூரும்
திரு வெண்ணீறணியாத திருவிலூரும்
பருக் கோடிப் பத்தியமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பல தளிகளில்லாத வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே"

எனப் பாடியுள்ளார்.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று பழமொழி உண்டு. கோவிலைப் பராமரிப்பதற்கு கல்வி அறிவு மிக அவசியம். எனவே வித்தியாசாலையும் வேண்டுமெனக் கூறுகின்றார். நாட்டின் இரு கண்களாக ஆலயமும், வித்தியாலயமும் விளங்குகின்றன.

கோவிலில் இறைவனுக்கு அபிடேகம் செய்யப் பசுப்பால் வேண்டப்பெறுகின்றது. அத்துடன் பசுவின் பால், தயிர், வெண்ணெய், கோசலம், கோமயம் ஆகிய ஐந்து பஞ்ச கௌபியங்களையும் அபிடேகத்தில் சேர்க்கின்றார்கள். பசுவின் உடலில் தெய்வ சக்திகள் உள்ளனவென இறையறிவுள்ள அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே பசுவை பேணி வளர்த்தல் வேண்டும். காளைகளையும் ஆதிகாலத்தில் தோட்டம் உழுவதற்கும், பாரவூர்தியில் பொருள்கள் ஏற்றிச் செல்வதற்கும் பயன்படுத்தினார்கள். இதனால் தைப்பொங்கலுக்கு அடுத்தநாள்

*ஆயிரம் பேரிடம் யோசனை கேள். ஆனால் முடிவை நீ மட்டும் எடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுப்பொங்கலென, மாடுகளைக் குளிப்பாட்டி, கழுத்தில் பட்டுத் துணியும், மாலையும் கட்டி மாட்டுப்பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். இன்றும் மாட்டுப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

பண்டைய மன்னர்கள் பல ஆலயங்கள் கட்டி, பராமரிப்பதற்கு விளை நிலங்களை வழங்கினார்கள். கடவுள் இருக்கிறான் என்பதற்கு எடுத்துக்காட்டாக பல கோபுரங்களுடன்கூடிய ஆலயங்களைக் கட்டி மக்களுக்கு உதவி செய்தார்கள். கல்தோன்றா மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றியவன்தான் கடவுள் என்பதை அப்பர் "மூவா பிறவா, இறவா போற்றி முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி" எனக் கைலாயத் திருத்தாண்டகத்தில் பாடியுள்ளார். நாயன்மார்களில் திருக்கைலாயக் காட்சியைக் கண்டவர், "மாதர்ப் பிறைக் கண்ணியானை...... கண்டறியாதன கண்டேன்" எனப் பாடியுள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இறைவனை என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் என அருளியுள்ளார். எனவே இறைவன் ஆலயங்களில் இருந்து தன்னை வழிபடும் அடியவர்களுக்கு அருள் சொரிந்துகொண்டிருக்கின்றார். மக்களை ஊக்குவிக்கும் நோக்கமாக பல அடியவர்கள் கோபுரமுள்ள ஆலயங்களைக் கட்டியுள்ளார்கள். கலியுகத்தில் கலியுகவரதனாக முருகன் விளங்குகின்றான். நல்லூர்க் கந்தன் யாழ் குடாநாட்டில் மூன்று கோபுரங்கள் உள்ள ஆலயமாக விளங்குகின்றது. இங்கு நாள்தோறும் பல சமயத்தவர் வந்து வழிபட்டுச் செல்வதைக் காண்கின்றோம். இவ்வாலயம் இருபத்தைந்து திருவிழாக்களை உடைய ஆலயமாக விளங்குகிறது. உற்சவ காலங்களில் பிரதட்டை இவ்வாலயத்தில் பெருந்தொகையான மக்கள் செய்கின்றார்கள். சுவாமி காவுவதற்கு அடியார்கள் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாலயத்தில் செல்லப்பா சுவாமிகள் தேரடியில் இருந்து விசரனைப்போல் நடித்து யோகரை நீ யார் என்று வினவி, யோகர் சுவாமி ஆக்கினார்.

இதுபோல் மாவிட்டபுரம் கந்தசாமி, கீரிமலையில் தீர்த்தம் ஆடி, ஆடி அமாவாசை விரதம் இருப்பவர்களுக்கு அருளும் புரிகின்றார். செல்வச்சந்நிதி முருகன் தொண்டைமானாறு ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். மாறாத நோயுள்ளவரையும் குணமடையச் செய்து முருகேசு சுவாமியார் என அழைக்கப்பட்ட சுவாமிகளை பல வருடங்கள் உயிருடன் வாழ வைத்தார். இன்னும் எத்தனையோ பேர் செல்வச்சந்நிதியானை வழிபட்டு நிம்மதியையும் பெற்றுச் சென்றுள்ளார்கள். செல்வச்சந்நிதியான் அருள்பெற்ற அடியவன் மோகனதாஸ் சுவாமிகள். அடியவரை சந்நிதி வேலவன் ஆட வைத்து அன்னதானம் செய்ய வைத்தார். அன்னக்கந்தன் என்பதை அறிய வைக்க மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழிகளை யும் காட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கின்றார். மோகன சுவாமியும் அடியவர்களை அன்பாக அழைத்து அன்னதானம் வழங்குகின்றார். வரும் அடியவர்கள் அருள்பெற அருள் பிரசங்கங்கள் செய்ய ஊட்டுகின்றார். இங்கு அன்னம் உண்டபின் அடியவர்கள் துன்பம் நீங்கி மனச் சந்தோஷத்துடன் செல்லுகின்றார்கள். எனவே ஆலயம் மனிதனுக்கு வினையை ஒழிக்க உகந்த இடம் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. தற்காலத்தில் விஞ்ஞானம் அதி உச்ச நிலையை அடைந்து, நொடிப்பொழுதில் உலகத்தவருடன் மனிதன் கதைக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பவனின் உருவங்களையும் காண்கின்றான். சந்திரனில் காலடி எடுத்து வைத்த மனிதன், செவ்வாய் மண்டலத்தையும் ஆராயத் தொடங்கிவிட்டான். ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சியில் இடர் ஏற்படும்போது இறைவனை வேண்டுவதை காண்கின்றோம். ஆராய்ச்சி இடங்களில் சிவனை வைத்திருப்பதாக அறிகின்றோம். விஞ்ஞானிகளும் கடவுள் இருப்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

மானிடராகப் பிறந்த ஆறறிவுள்ள மனிதனுக்கு வினையை ஒழிக்க ஆலயம் வேண்டுமென்பது மறக்கமுடியாத ஒன்றாகின்றது. எனவே மனிதன் நாடொறும் ஆலயம் சென்று வழிபடுதல் மனிதனுக்கு வேண்டப்படுகின்றது. மனிதன் சந்தோஷமாகவும், நோயற்றவனாகவும் வாழ ஆலயந்தான் ஒரே வழியாகும்.

---

## இதில் எந்தப் பொம்மை நீங்கள்?

ஒரு நாட்டை ஆளும் அரசன் ஒருவனிடத்தில், அந்த நாட்டின் சிற்பி நான்கு பொம்மைகளைக் கொண்டுவந்து தருகிறார். அரசன் கோபமாக "நான் என்ன சின்னக் குழந்தையா? இதை வைத்து விளையாடுவதற்கு" என்று கேட்கிறார்.

சிற்பி "இல்லை அரசே, இது வருங்கால ராஜாவுக்கு. அதாவது நம் இளவரசருக்கு" என்கிறார். "இந்தப் பொம்மைகளில் சில விசேசங்கள் உண்டு. நான்கு பொம்மைகளின் ஒரு பக்க காதிலும் ஓட்டை இருக்கிறது பாருங்கள்" என்கிறார்.

அரசன் "இதில் என்ன விசேசம் இருக்கிறது" என்கிறார். முதல் பொம்மையை அரசனிடம் கொடுக்கிறார் சிற்பி. கூடவே ஒரு மெல்லிய சங்கிலியையும் கொடுத்து அதன் காதில் இருக்கும் ஓட்டையில் விடச் சொல்கிறார். சங்கிலி மறுபக்க காதின் வழியே வருகிறது.

சிற்பி, "மனிதர்களில் சிலர் நாம் எதைச் சொன்னாலும் இப்படித்தான் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதின் வழியே அனுப்பி விடுவார்கள்" என்கிறார். இரண்டாவது பொம்மையை கொடுத்து அதையே திருப்பிச் சொல்கிறார். இந்தப் பொம்மையில் சங்கிலி வாய்வழியே வருகிறது. "இந்தமாதிரி மனிதர்கள் எதைச் சொன்னாலும் அதை அடுத்த நொடி வெளியேவிட்டு பரப்பிவிடுவார்கள்" என்கிறார். பிறகு மூன்றாவது பொம்மையைக் கொடுத்து மீண்டும் அதையே செய்யச் சொல்கிறார். இதில், சங்கிலி வெளியே வரவே இல்லை. சிற்பி, "இவர்களிடம் எதைச் சொன்னாலும் உள்ளேயேதான் இருக்கும். வெளியே வராது" என்கிறார்.

அப்போது இதில் "யார்தான் சிறந்த மனிதர்" என்று அரசன் கேட்கிறார். "என் கையில் இருக்கும் இந்த நான்காவது பொம்மைதான் சிறந்த மனிதன்" என்று சிற்பி சொல்கிறார். அரசன் பொம்மையின் காதின் வழியே சங்கிலியை விடுகிறார். மறுபக்க காதின் வழியே வெளிவருகிறது. சிற்பி மீண்டும் செய்யச் சொல்கிறார். இரண்டாம்முறை வாயின் வழியே வெளிவருகிறது. சிற்பி மீண்டும் செய்யச் சொல்கிறார். மூன்றாம் முறை வரவேயில்லை. சிற்பி "நான்காவது பொம்மை போன்ற மனிதர்கள்தான் நம்பகமான வர்கள் அவர்களை முழுமையாக நம்பலாம். எங்கு பேச வேண்டுமோ அங்கு பேசி, எங்கு கேட்க வேண்டுமோ அங்கு கேட்டு, எங்கு அமைதி காக்கவேண்டுமோ அங்கு அமைதி காப்பார்கள்" என்று விளக்கம் கூறினார்.

*பாராட்டியவர்களைவிட அவமானப்படுத்தியவர்களே அதிக வெற்றியாளர்களை உருவாக்குகிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருக்கயிலாயம்

**-திரு வி. செல்வரத்தினம் அவர்கள்-**

நேபாளம் நாட்டின்மூலமாகப் போனால் இப்பாதை இலகுவாக இருக்கும். அநேக யாத்திரிகர்கள் இப் பாதையைத்தான் உபயோகிக்கிறார்கள். நேபாள நாட்டின் தலைநகரான காத்மண்டுவுக்குப் போக வேண்டும். அங்கே பல விடுதிகள் உள்ளன. அநேக யாத்திரிகர்கள் கார்டன் விடுதியில்தான் தங்குவார்கள்.

அடுத்தநாள் காலைக்கடன்களை முடித்துக் குளித்து விடுதியிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள பசுபதி ஈஸ்வரர் ஆலயத்துக்கு டீலக்ஸ் வான் மூலம் போய் பசுபதி ஈஸ்வரரைத் தரிசனம் செய்ய வேண்டும். இந்த ஆலயத்தைச் சுற்றி வேறு ஆலயங்களும் உள்ளன. இந்த ஆலயத்தில் சிவபெருமான் புனிதம் வாய்ந்த சிவலிங்க வடிவமாக உள்ளார்.

இந்த இடம் இந்துக்களுக்குச் சமயம் சார்ந்த முக்கிய இடமாகும். இவ்வாலயத்தைச் சுற்றி பூங்காக்கள், எழில்மிகு இயற்கைக் காட்சிகள் ஆகியவை இருக்கின்றன. இவற்றைப் பார்க்க மிக மகிழ்ச்சியாக இருக்கும். பசுபதிநாதர் கோயில் பரந்த நிலப்பரப்பில் வெட்ட வெளியில் அமைந்துள்ளது. இக் கோயில் ஓர் உயர்ந்த தளத்தின்மீது கட்டப்பட்டுள்ளது. பல சிற்பக்கலை வேலைப்பாட்டின்படி கோபுரத்துடன் திகழ்கின்றது.

இக் கோயிலுக்கு உள்ளே செல்ல நான்கு நுழை வாயில்கள் உள்ளன. பசுபதிநாதரை நான்கு திசைகளிலிருந்து எந்த வழியிலிருந்தும் போய் வணங்கலாம். கோயில் கூரைகள் பொன் தகடுகளால் வேயப்பட்டுள்ளன. சூரிய ஒளியில் பொன் தகடுகள் ஜொலித்துக் கொண்டிருக்கும். கதவுகள் வெள்ளித் தகடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

மேலும், இதனைவிட நான்கு புனிதத் தலங்கள் உள்ளன. அவையாவன: துவாரகை, கேதார்நாத், இராமேஸ்வரம், பூரிஜகந்நாத் ஆகும். இத்தலங்களுக்கும் சென்று வழிபட்ட பின் இறுதியாக பசுபதிநாதரை வழிபட்டு அவரது அருளைப் பெறவேண்டும். அப்போதுதான் மேற்கொண்ட புனிதப் பயணம் நற்பயனாகும் என்பது இந்துக்களின் முழு நம்பிக்கையாகும்.

இங்கு மகா சிவராத்திரி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவுக்கு நேபாளத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் யாத்திரிகர்கள் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். இவர்கள் மகாசிவராத்திரியில் சிவனைப் பூஜித்து சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து இரவு முழுவதும் கண் விழித்திருந்து துதிப்பாடல்கள் பாடியவண்ணம் இருப்பார்கள். பசுபதிநாதர் ஆலயத்தில் சாம்பிராணி, ஊதுபத்தி, கற்பூரம் ஏற்றப்படுவதால் எழும் நறுமணம் எங்கும் கமழ்ந்து கொண்டேயிருக்கும். யாத்திரிகர்கள் பூஜை வழிபாடு முடித்தபின்னர் தங்கள் இருப்பிடத்திற்குச் செல்லலாம்.

அடுத்தநாள் காலைக் கடன்களை முடித்துக் குளித்து விடுதியிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தடசிணகாளி கோயிலுக்கு ஒரு வான் மூலம் போகவேண்டும்.

*துணிவு உங்களை உழைப்பில் உயர வைக்கும். பணிவு உங்களை பிறர் மனதில் உயர வைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்குச் சற்று முன்னே ஒரு மேட்டு நிலம் உண்டு. அங்கே மட்டும்தான் வான் போகும். பின் ஆலயத்திற்கு நடந்தே போகவேண்டும். போகும் வழியில் கடைகள் இருக்கும். அங்கே அர்ச்சனைக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு போகவேணடும். பின் காளி கோயிலுக்குப் போகலாம். அங்கே ஆண்கள் ஒரு பக்கமும் பெண்கள் ஒரு பக்கமும் நின்று காளி தரிசனம் செய்ய வேண்டும். இவ்வாலயத்தில் பெண்கள்தான் பூஜை செய்கிறார்கள். பூசாரிமார்கள் அர்ச்சனை செய்து நிவேதனமாகப் படைக்கும் வாழைப்பழம் மற்றும் பொருட்களை அடியார்களுக்கு மிகவும் பயபக்தியுடன் கொடுப்பார்கள்.

தட்சிணகாளி கோயில் திறந்த வெளியில் அமைந்த ஒரு சிறிய கோயிலாகும். இக் கோயிலுக்கு இந்து மதத்தினர் மாத்திரம்தான் செல்ல முடியும். மற்ற மதத்தினர் தூரத்தில் நின்று பார்க்கலாம். பூசாரிமார் (பெண்கள்) கோயில் பிரசாதத்தை கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பகிர்ந்து கொடுப்பார்கள்.

தட்சிணகாளியின் பக்கத்தில் காளியின் வேறு சில அம்சங்களைக் கொண்ட விக்கிரகங்கள் இருக்கின்றன. தட்சிணகாளி கோயிலுக்குச் சற்றுத் தூரம் தள்ளிப்போக அங்கே ஆடுகள், கோழிகள் வைத்து விற்பனை செய்வதைப் பார்க்கக்கூடியதாக இருக்கும். ஆடுகள், கோழிகள் பலியிடுவதற்கு நேபாளிகள் இருக்கின்றனர். இவர்கள் கோழிகள் மற்றும் 7 ஆடுகளை ஒரே வெட்டில் வெட்டுவார்கள். இவர்களை பண்டாக்கள் என அழைப்பார்கள்.

மறுபக்கத்தில் சற்றுத் தள்ளி, பலியிட்ட ஆடுகள் மற்றும் கோழிகளின் இறைச்சியைத் துண்டாக்கிப் பொலித்தீன் பையில் வைத்து பக்தர்களுக்குக் காளியின் பிரசாதமாக வழங்குவார்கள். பிரசாதத்தின்போது, தாயும் சேயும் நலமுடன் இருக்கவேண்டும் என்ற பிரார்த்தனையின் பேரில் இங்கு ஆடுகளும் கோழிகளும் பலியிடுகின்றனர் என நேபாள மக்கள் கூறுகின்றனர்.

சிவராத்திரியன்று இறப்பவர்களுக்கு மறுபிறப்பு இல்லை என்று அங்குள்ள ஞானிகள் கூறுவார்கள். ஹோம குண்டத்திலிருந்து கிடைக்கும் சாம்பல், இறுதியில் மக்கள் ஒரு பிடி சாம்பலாகிப் போவார்கள் என்பதை நினைவூட்டும் நிகழ்ச்சியாகும்.

இதன் பின்னர் குவிற்யேஸ்வரி கோயிலுக்குப் போகவேண்டும். இது மிகவும் பிரசித்திபெற்ற அம்மன் ஆலயம். இவ்வாலயம் பசுபதிநாதர் ஆலயத்திலிருந்து 20 மைலுக்கு அப்பால் உள்ளது. இந்த அம்மன் அறுபத்துநான்கு சக்திபீடங்களுள் ஒன்றாகும்.

பின்னர் யாத்திரிகர்கள் அங்கிருந்து "புத்தநீலகாத்தர்" என்ற விஷ்ணு கோயிலுக்குப் போகவேண்டும். இந்தக் கோயிலுக்கு அருகில் ஒரு குளம் இருக்கிறது. இந்தக் குளத்தின் நடுவில் சுமார் இருபது அடி அகலமும் நூறு அடி நீளமும் கொண்ட மகாவிஷ்ணு பாம்பணையில் பள்ளிகொண்டிருப்பதுபோல் அமைத்திருக்கிறார்கள். அவரை யாத்திரிகர்கள் தரிசனம் செய்வார்கள். இங்கு தண்ணீரில் பள்ளிகொண்ட நிலையில் மகாவிஷ்ணு இருப்பதால், மேட்டிலிருந்து பள்ளத்தில் உள்ள படிகளில் இறங்கிச் சென்று அவரை வணங்கவேண்டும்.

பின் அங்கிருந்து "சுயம்புநாத்" என்ற புத்தர் கோயிலுக்கு கண்டிப்பாகப் போகவேண்டும். இது ஒரு சிறிய மலைமேல் இருக்கிறது. இந்த இடத்திற்கு ஒரு சமயம் புத்தர் வந்ததாகக் கூறப்படுகிறது. இன்றும் அங்கே பல இடங்களைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

*எதையும் எதிர்கொள்வேன் என்ற மனநிலை மட்டுமே நம்பிக்கையைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இங்குள்ள இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் பெரிய அற்புதமான அம்மன் ஆலயம் ஆகும். ஆலயத்தின் கூரை பித்தளைத் தகட்டால் வேயப்பட்டு இருக்கிறது. இந்த ஆலயம் கி.பி. 1407இல் கட்டப்பட்டதாக அறியமுடிகிறது. இதனருகில் சிவபிரானின் சக்திமிக்க துணைவியார் குஹேஸ்வரியின் கோயிலும் இருக்கிறது.

மேலும் இங்குள்ள புவனேஸ்வரி கோயில் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என அங்கே உள்ளவர்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இந்த அம்பாள் மிகவும் சக்தி வாய்ந்தவர். இதனருகில் தட்சிணாமூர்த்தி கோயில் இருக்கிறது. இது 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கிறது. அதன் பின் பசுபதிநாதர் அருகிலுள்ள 1008 இலிங்கத் திருமேனிகளை வணங்கியபின் விடுதிக்குத் திரும்பலாம்.

பின்னர் திரும்பவும் யாத்திரிகர்கள் ஐந்து முகம் கொண்ட பசுபதிநாதர் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வணங்கலாம். பின்னர் நேபாள நாட்டு 100 ரூபா கொடுக்க பண்டாக்கள் அபிஷேகம் செய்து ஒரு உருத்திராட்ச மாலையும் பிரசாதமும் கொடுப்பார்கள். இந்த ஆலயத்தின் நந்தி மிகப்பெரியது. பித்தளைக் கவசம் போடப்பட்டிருக்கிறது. ஆலயத்தில் உத்தர வைரவரும் வீற்றிருக்கிறார்.

மேலும், தொல்பொருள் ஆய்வாளர்கள் இந்த இடத்தை வரலாற்றுச் சிறப்பாகக் கருதி ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். புகழ்வாய்ந்த மகாபாரதக் காவியம் நேபாளத்திலுள்ள புகழ்பெற்ற பல புண்ணியத் தலங்களைக் குறிப்பிடுகின்றது. அந்தவகையில் பசுபதிநாதர் ஆலயமும் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாபாரதம் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்டது. இதிலிருந்து பசுபதிநாதர் ஆலயம் மிகப் பழமையான ஆலயம் என்று அறியக்கூடியதாக உள்ளது.

பசுபதிநாதரின் தரிசனத்திற்குப் பின்னர் அருகிலுள்ள பாக் நதிக்கரைக்குச் சென்று அங்கே அதன் கரையில் காசியில் ஹரிச்சந்திராகாட், மணிக்கர்காட் போன்ற இடங்களில் நடப்பதுபோல் இறுதிச்சடங்குக் காரியங்களைச் செய்து ஆற்றில் அஸ்தி கரைப்பதைப் பார்க்கக்கூடியதாக இருக்கும். நேபாள நாட்டவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்.

சிவராத்திரி அன்று ஆலய வாசலுக்கு முன் ஹோமகுண்டம் வைத்து யாகம் செய்வது வழக்கம். யாக கிரியைகள் நடந்துகொண்டிருக்கும்போது பக்தர்கள் ஒவ்வொருவரும் அங்கே அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் மரக்கட்டையில் ஒவ்வொரு மரக்கட்டையை ஹோமகுண்டத்தில் போட்டு வணங்குவார்கள். யாகம் செய்தபொழுது வந்த சாம்பலை எடுத்துக்கொள்வார்கள். இந்தச் சாம்பல் ஒரு விசேட மருத்துவசக்தி கொண்டது.

மகா சிவராத்திரியில் கங்கை நீரால் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தால் நன்மைகள் பல உண்டாகும் என்பது மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். எனவே, இதன் நிமித்தம் யாத்திரிகர்கள் வரும்போது தங்களுடன் கங்கை நீரைக் கொண்டு வருகிறார்கள். அந்த நீரைக் கொண்டு பூசாரிமார்கள் (குருக்கள்) பசுபதிநாதருக்கு அபிஷேகங்கள் செய்கின்றனர். பின் அபிஷேக நீரின் ஒரு பகுதி யாத்திரிகர்களுக்கு வழங்கப்படுகிறது.

(தொடரும்...

*துயரங்களை நினைத்து துன்பப்படுவதைவிட உயரங்களை நினைத்து உத்வேகப்படுத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 92

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 மழைபொழிய அதுபோலத் தான்பொழிய வேண்டுமென்று
மரம்பொழிந்து சிலுநீரைத் தானிழந்து கருகிடல்போல்
துடைத்தெறிய வழியறிந்தோர் தூர்நடத்தை பலவிழைக்க
அறியாத் பருவத்தார் அதையிழைத்தல் அழிவாகும்.

02 அணில் தாவ அதுபோலத் தான்தாவ வேண்டுமென்று
எலிதாவி எழிலிழந்து பூனையின்வாய்ப் போதல்போல்
பகட்டாக வாழ்வோரின் பசபசப்பிற் கிரையாகி
பாலர்தம் பசுமையினைப் பறிகொடுத்தல் அழிவாகும்.

03 பாம்பாட அதுபோலத் தானாட வேண்டுமென்று
சிறுஓணான் தானாடித் தனைக்காட்டிக் கொடுத்தல்போல்
பெருமாந்தர் சிலர்தீய செயல் செய்யக் கண்டுகொண்டு
சிறுபாலர் அதைநாடல் தமக்கேதான் அழிவாகும்.

04 நிலாக்காய அதுபோலத் தான்காய வேண்டுமென்று
மின்மினிகள் தாம் காய்ந்து தம்ஒளியும் கெட்டிடல்போல்
சொர்க்கமெனப் பிறர்காட்டும் சுகபோகத்திற் காட்பட்டு
பிள்ளைகளும் நடந்திடுதல் நிஜவாழ்விற் கழிவாகும்.

05 தேடிப்பிடிக்க வேண்டியது தொலைந்தவற்றை மட்டுமன்று
தேடக் கிடைக்காத தெளிவான அறிவையுமாம்
தெளிவான அறிவை நாங்கள் தேடாமல் விட்டுவிட்டு
தொலைந்தவற்றைத் தேடியென்ன மடமை வாழ்வைத் தொலைத்திடாதோ.

06 விட்டெறிய வேண்டியது வீட்டழுக்கை மட்டுமன்று
ஒட்டுண்ணி போல நெஞ்சுள் ஒட்டிநிற்கும் அழுக்கையுமாம்
ஒட்டி நிற்கும் நெஞ்சழுக்கை விட்டெறிய முயன்றிடாமல்
வீட்டழுக்கை விரட்டியென்ன நெஞ்சழுக்கு நிறையும் தானே.

*உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 வளர்த்தெடுக்க வேண்டியது வாரிசினை மட்டுமன்று
மறைந்த பின்னால் இறைவனை நாம் அடைகின்ற மார்க்கமுமாம்
இறைவனை நாம் அடைகின்ற மார்க்கத்தை வளர்த்திடாமல்
வாரிசினை வளர்த்தென்ன வழித்துணை பின் இறைதானே.

08 கட்டிவைக்க வேண்டியது கட்டாக்காலி மட்டுமன்று
கண்டபடி அலைகின்ற எங்களது மனத்தையுமாம்
எங்களது மனங்களை நாம் கட்டி வைக்க முயலாமல்
கட்டாக்காலி கட்டியென்ன நாமுமந்த வகைதானே.

09 எட்டிப் பிடிக்க வேண்டியது எட்டாதவை மட்டுமன்று
எட்டக் கூடியதும் எட்டிப்பிடிக்க வேண்டியதாம்
எட்டக் கூடியதை எட்டிப்பிடிக்க முயலாமல்
எட்டாதவற்றிற்கு எட்டுவது எட்டுவதையும் விடத்தானே.

10 முகஸ்துதிகள் பார்ப்பதுவும் பிழையென்று ஆகாது
முடிந்தோர்க்கு அதுவன்றி முடியாற்காய் அதுவிருந்தால்
முடியாரை ஒதுக்கிவிட்டு முடிந்தோர்க்காய் முகம் பார்த்தால்
முடியார்க்கு முகம் பார்த்து முடிந்தோரை இறைஒதுக்கும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல — 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல — 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*உன்னை நிராகரித்த இடத்தில் நிராகரிக்கவே முடியாத அளவுக்கு வளர்வதுதான் வெற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அலங்கல் அணிந்தருளே

–திரு முருகவே பரமநாதன் அவர்கள்–

அலங்கல் - மாலை. அணிதல் - சூடுதல், தரித்தல், போடுதல், உடுத்தல்.

தொங்கல், தொடை, சரம், இண்டை, தாமம் எனப் பல மாலை வகையுண்டு. மலர்களாலே கட்டப்படுவது மாலை. மணமக்கள் அணிவது மங்களமாலை. பலவகைப் பூக்களாலாயது பூமாலை. பூக்களின் மத்தியிற் பச்சிலைகளும் சேர்க்கப்படும். இறைவனுக்குப் பூசைபண்ணப் பயன்படுத்தும் மலர்களுக்கு விதியுண்டு. இலைகளைப் பத்திரம் என்பர். இப்போ போகன்விலா, எக்சோறா போன்ற மலர்களை எல்லாம் பயன்படுத்துகிறார்கள். இது விதிக்குட்படாது. ரோஜாமலர் சிறந்தது. அதை நிலத் தாமரை என்பர். நாவலர் பெருமானுக்கு அஃது விருப்பமான மலர் என்றாலும் அதைச் சிவபூசைக்கு எடுக்கமாட்டார். வில்வம் சிவனுக்கும், துளசி திருமாலுக்கும் உகந்தவை. வில்வம்போல மூன்று இலைகளமைந்த விளா, மாவிலங்கை, முட்கிழுவை, பொன்னொச்சி, நொச்சி என்பனவும், புன்னையிலையும் ஆண்டவன் பூசைக்குகந்தன. அறுகு ஐங்கரனுக்குரியது. சுவாமியை அலங்கரிக்கப் பலவித மாலைகள் பயன்படும். முத்துமாலை பெண்கள் கழுத்தையும், உருத்திராக்கமாலை துறவிகளின் கழுத்தையும் அலங்கரிக்கும். பூவொடு நீர்சுமந்தேத்தி புண்ணியஞ் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு, யாவர்க்குமாம் இறைவற்கோர் பச்சிலை என்ற பிரயோகம் இறைவனை வழிபடும் வகையைக் குறிக்கும். பூமாலைபோல இறைவனுக்குப் பாமாலை சூடி வழிபடும் மரபு சைவசமயிகளின் வழிபாட்டுமுறை. பூமாலை வாடும். வாடாத சொன்மாலை பாமாலை. பன்மாலைத்திரளிருக்கு, பாமாலைக்கே நீதான் பட்சம் என்று நன்மாலையாய் எடுத்துச் சொன்னார். நல்லோர் என்பது தாயுமான சுவாமிகள் திருவாக்கு. இவையே தோத்திரங்கள். தமிழில் எழுந்த தோத்திரங்கள் கவிதை வடிவின. காரைக்காலம்மையாரில் இருந்து, இராமலிங்க சுவாமிகள் வரை பலரின் திருப்பாடல்கள் நம் சமயச் சொத்துக்கள். நாலாயிர திவ்விய பிரபந்தம், அஷ்டப்பிரபந்தம், தேசிகப் பிரபந்தம் வைணவ இலக்கியங்கள், நக்கீரர், அருணகிரியார் உட்பட பலர் முருகனைப் பாடியுள்ளனர். அபிராமியந்தாதி, பதிகம் அம்பாள்மேல் எழுந்தவை. சரஸ்வதியந்தாதி கலைமகள் மேலெழுந்தது. இவ்வரிசையில் வள்ளலார் கொடுத்த பிரயோகம் தான் இவ்வாக்கத்தின் மகுடம். ஒரு பாடல் வருமாறு.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல் கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென் காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே.

-அருள் விளக்கமாலை 2.

அணிதல் - சூடுதல். பொது - சிதம்பரம், தில்லை, பொன்னம்பலம், சிற்றம்பலம். ஆடும் அரசு - கூத்தப்பிரான், ஆடல் வேந்தன், நடராசன், கூத்தன்.

இவ்வருட்பாவின் மேன்மை நிழல், தீஞ்சுவைத் தண்ணீர், பூங்காத்து என்பவற்றின் செவ்வி மூன்று அனுபவங்களாகத் தொடர்புறுத்தல், ஆடல் வல்லானோடு. வெயில் அருமை நிழலிற் தெரியும் என்பர். வெயிற் கேற்றி நிழலுண்டு என கவிமணி உமர்கயாம் பாடலை மொழிபெயர்க்கையிற் பாலித்துள்ளார். எனவே கோடை வெதுப்பலில் வேப்பம், ஆலம், நிழல்கிடைத்தாலெப்படி இருக்கும். அம்மரங்கள் அளிக்கின்ற நிழல் எப்படியெல்லாம் ஆறுதல் அளிக்கும் அவ்வாறுதலிற் கண்டதே சுகமும் மன இதமும் எப்படி இருக்கும். இதிலும் மேலான செவ்வி நடனமிடும் நடராசனில் இருந்து வள்ளலாருக்குக் கிடைக்கிறது. அதோடு நின்று விடவில்லை. தெளிந்த நீரோடையிற் குளிர்ந்து ஓடிவரும் தண்ணீர் எப்படி இதமளிக்கும். அத்தண்ணீரை இரு கைகளாலும் மொண்டு குடித்தால் எப்படிச் சாந்திதரும். இதையெல்லாம் விட்டு அவ்வோடையிலே மிதந்து காட்சி தரும் தாமரையின் இனம் காணமுடியாத சுகந்தம் எப்படியெல்லாம் புது அனுபவங்களை அள்ளி அள்ளித் தரும். இவ்வித அனுபவங்களை எல்லாம் விஞ்சிநிற்கிறது இறை அனுபவம். திறந்த வெளியில் மெல்லென வீசி உடம்பைத் தொடும் பரவசமான தென்றற்காற்று இதன் பயன்கூடச் சொல்லிலே வடிக்கமுடியாதன. இவற்றை அனுபவிக்கும் பூரிப்பிலும் மேலோங்கி நிற்கும் இறையனுபவத்தை அனுபவித்து அசைமீட்ட பாடல் இது. இவ்வரிசையிலே பல பாடல்களை வடித்துள்ளார் வள்ளலார். அலங்கணிய வேண்டியவர் அரும்பும் அணிந்தருளேயென விநயமாய் வேண்டுகிறார்.

கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
பண்களிக்கப் பாடுகின்ற பாட்டில் விளைசுகமே
பத்தருளே தித்திக்கப் பழுத்த தனிப்பழமே
மண்களிக்க வான்களிக்க மணந்தசிவ காம
வல்லிஎன் மறைகள் எலாம் வாழ்த்து கின்ற வாமப்
பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே நினது
பெரும் புகழ்ச்சே வடிகளுக்கென் அரும்பும் அணிந்தருளே.

-மேலது 5.

ஆடலழகனது நடனத்தைப் பக்கத்திருந்து பார்த்து அனுபவித்து ஆனந்தப்படுகிறாள் சிவகாமசுந்தரி. கருப்பூரம் தன்னையே அர்ப்பணஞ் செய்து அந்தர்யாமியாப் போவது உயிர் இறைவனைக் கலப்பது போன்றது. நாமெல்லாம் நம்மை இழந்தோமா.

தமிழோடிசைபாடல் மறந்தறியேன் என்பது தாண்டகவேந்தர் வாக்கு. பண்ணின் இசையாய் நின்றாய் போற்றி என்பதுமவரே. எனவே பண்ணோடு இசைக்கும் பாட்டு செவிநுகர் கனியேதான். எனவே பக்குவமான பண்ணிசையை அனுபவிப்பவனறிவான் அதன் விளைவு. இதற்குமப்பாலே பழவடியாரின் உள்ளத்தே பழுத்த பழமாகக் குழைந்து ருசிக்கிறான் அந்த

*கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல. உங்களைத் தூங்கவிடாமல் செய்வது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றடியார். இவ்வாறெல்லாம் திகழும் தில்லைக்கூத்தனின் ஆடலும், வள்ளலாரின் பாடலும் கரைந்துபோன காட்சி இது. இப்படியெல்லாம் உலகம் நடைபெற ஆடற்பிரான் எப்படியானவன். பாட்டைப் படித்து முடிவு செய்வோம்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்னரசே யான் புகலும் இன்னிசையும் அணிந்தருளே.
-மேலது 8.

நரர்- மனிதர், சுரர் - தேவர், களிப்பு - மகிழ்ச்சி, மதி அறிவு, புத்தி, நடுநிற்றல் - நீதி ஒப்புரவு. எதிர்புதிரான பாவங்கள் நிறைந்த இரு வேறுபட்ட மனிதர்க்கும் தராசுபோல் அருள்பாலிக்கிறான் ஆடற்பிரான். இனிவரும் பொருள் பொதிந்த பாடலை சற்றுக் கேட்போம்.

திரை இலதாய் அழிவிலதாய்த் தோலிலதாய்ச் சிறிதும்
சினைப்பிலதாய்ப் பனிப்பிலதாய்ச் செறிந்திடு கோதிலதாய்
விரை இலதாய்ப் புரைஇலதாய் நார்இலதாய் மெய்யே
மெய்யாகி அருள்வண்ணம் விளங்கிஇன்ப மயமாய்ப்
பரைவெளிக்கப் பால்விளங்கு தனிவெளியில் பழுத்தே
படைத்தஎன துளத்தினிக்கக் கிடைத்தனிப் பழமே
உரைவளர்மா மறைகளெலாம் போற்றமணிப் பொதுவில்
ஓங்கும்நடத் தரசேஎன் உரையும் அணிந்தருளே.
-மேலது 9.

தனிப்பழம் - ஒப்பற்ற பழம். இறைவனைக் கனிந்த கனியாகக் காட்டுகிறது இவ்வருட்பா. எவ்வித குற்றமுமில்லாத உயர்ந்த பழம்தான் நடனசிகாமணி அவரை விளித்து என் உரையும் அணிந்தருளே எனக் கேட்கிறார் இராமலிங்கர். எந்தெந்த நிலைகளிலெல்லாம் இறைவன் இனிக்கிறான்.

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கம்நின்று கேட்டாலும் பரிந்துள் உணர்ந்தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தருளுங் கனியே
மெய்ம்மைஅறி வானந்தம் விளக்கும் அருள் அமுதே
தீர்த்தாஎன் றன்பர் எலாம் தொழப் பொதுவில் நடிக்கும்
தெய்வநடத் தரசேஎன் சிறுமொழிஏற் றருளே

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால், நினைத்தால், படித்தால், படிப்பதைக் கேட்டால், உணர்ந்தால், அவன் நம்மைக் கவர்ந்தாலும், தொட்டுப் பிடித்தாலும், கட்டியணைத்தாலும் இனிப்பவன் இறைவன். இவ்வாறு கனிபோற் தித்திப்பவன் திகம்பரன். தீர்த்தனே என்றெல்லாரும் அழைக்கின்ற இறைவா - பொதுமன்றுள் தினம் நின்று நடம்புரியும் தெய்வ நடத்தரசே எனது சிறு மொழியை ஏற்றருளே என்பது இப்பாவின் பொருளாகும். சிவமொழி, ஏற்றருளே, இசையும் அணிந்தருளே என் உரையுமணிந்தருளே அரும்பும் அணிந்தருளே என்னும் பாடல்களெல்லாம் பாமாலையின் பக்குவத்தையே தெரிவிக்கின்றன. இப்படி ஆயிரமாயிரம் பாடல்களை அருளியுள்ளார் அருட்சோதி வள்ளலார். ஓர் பாடல் அருட்சோதித் தெய்வமென்றே ஆரம்ப மாகிறது.

அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகள்எல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத்தெய்வம்
இருட்பாடு நீங்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

-பரசிவநிலை 85.

இந்தவகையிலே தில்லையில் நடம்புரியும் நடராஜனின் ஆடற்பாணியை அழகார் தமிழில் வடித்த ஓர் பாவம் நிறைந்த பாடலையும் இங்கே ஒப்பீடு செய்தல் சாலப் பொருந்தும்.

எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்தினும்
எய்துகபி றப்பில்இனிநான்
எய்தாமை எய்துகினும் எய்திடுக இருமையினும்
இன்பம்எய் தினும் எய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும் வருக
வறுமை வருகினும் வருக மதிவரினும் வருகஅல
மதிவரினும் வருக உயர்வோ.
பிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகஅல
தெதுபோ கினும் போகநின்
இணையடிகள் மறவாத மனம்ஒன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும் அரசே
கழிவகைப் பவரோக நீக்கும்நல் அருள்எனும்
கதிமருந் துதவு நிதியே
கனக அம்பலநாத கருணையங் கண்போத
கமல குஞ்சித பாதனே.

குஞ்சிதம் - வளைந்த. -குஞ்சிதபாதப் பதிகம் 1.

**இலட்சியம் இருக்கும் இடத்தில் அலட்சியம் இருக்காது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர் (தொடர்ச்சி...)

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## சற்றே விலகும் பிள்ளாய்

எந்நாட்டவர்க்கும் இறைவனாம் சிவபெருமான், பஞ்சபூதங்களில் எல்லையே காணமுடியாத ஆகாயத்தைத் தனதாக்கிக்கொண்டு அருளும் திருத்தலம் சிதம்பரம். இந்தப் புண்ணிய ஷேத்திரத்தில் மார்கழி மாதம் திருவாதிரை தினத்தன்று நிகழும் ஆருத்ரா தரிசனம் மிக அற்புதமான வைபவம். உலக இயக்கத்திற்கு காரணமான ஈஸ்வரனின் உன்னத நடனத் திருக்கோலத்தை சிறப்பிக்கும் திருவாதிரை நாளில் சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜரை வழிபட்டு வர இன்னல்கள் அகன்று வாழ்க்கை இனிமையாகும்.

சிதம்பரம் சென்றுவர இயலாவிடில் தென்னாடுடையானின் ஆடல் கோலத்தைச் சிறப்பித்து அடியார்கள் பாடி வைத்த பாடல்களைப் பாடி வீட்டிலேயே வழிபடலாம்.

குகை நமசிவாயர் என்பவர் மிக உத்தமமான பக்தர். அவர் ஒருமுறை நடராஜப் பெருமானுக்குத் தங்கத்தில் சதங்கை செய்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த நாத்திகர்கள் சிலர் உன் இறைவன் ஆடுவாரோ என்று பரிகாசம் செய்தனர். உடனே,

அம்பலவா! இன்னொருக்கால் ஆடினால் ஆகாதோ?
உம்பரெல்லாம் கண்டது உனக்கு ஒப்பாமோ? சம்புவே!
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்கும் தித்தியென
எற்றுப் பதஞ் சலிக்குமே....

என்று பாடினார். உடனே விக்கிரக வடிவில் இருந்த நடராஜர் நடனமாடிக் காட்டினார். இந்த நடராஜரின் திருநடனத்தைக் காண வாருங்கள் என்று ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அழைக்கிறார்.

கூற்றிருக்கும் மடலாழிக் குரிசின் முதலோர்
இறைஞ்சக் கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்கும் தில்லை வனத் தசும்பிருக்கும்
பசும் பொன்மன்றத்து ஒருதாள் ஊன்றி

வண்டுபாடச் சுடர் மகுடமாப் பிறைத் துண்டமாடப்
புலித்தோலுமாடப் பகிரண்டமாடக் குலைந்து அகிலாடக்
கருங்கொண்டலோடும் குழற் கோதையோடும் கறைக்
கண்ட னாடுந்திறங் காண் மினோ.

அவசரமாகத் தவறு செய்வதைவிட தாமதமாகச் சரிவரச் செய்வதுமேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நடராஜரின் ஆருத்ரா நடனக் காட்சியை நேருக்கு நேராக நமக்குக் காட்டி அழைக்கிறார் ஸ்ரீ குமரகுருபரர். நாமும் ஆருத்ரா நாயகனைத் தரிசனம் செய்வோம். அல்லல்கள் ஓடச் செய்வான்.

லிங்கஸ்வரூபமாக எல்லாம் வல்ல சிவபெருமான் இறைவியுடன் எழுந்தருளியுள்ள ஷேத்திரங்களுள் சிறப்பு வாய்ந்தது திருப்புன்கூர் தலம். மூவராலும் பாடல்பெற்ற தலம். தாழ்த்தப்பட்ட வகுப்பில் அவதரித்து, சிவலோகநாதனை அனவரதமும் உள்ளம் எனும் கோயிலில் ஆராதித்து வந்த பரமபக்தரான நந்தனாருக்கு சிவபெருமான் திவ்ய தரிசனம் அளித்த சரித்திரம் மெய்சிலிர்க்க வைக்கும். ஆதனூர் என்ற கிராமத்தில் தோன்றிய நந்தனார் ஓர் அந்தணரிடம் விவசாயத் தொழில் புரிந்து வந்தார். இதைத் தவிர சிவாலயங் களுக்கு மத்தளம் போன்ற வாத்தியங்களுக்கு வார், தோல் போன்ற பொருட்களைக் கொடுத்து வந்தார். "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்பதற்கேற்ப சிவபிரானின் அளவற்ற கருணையால் அவர் குலமரபிலோ, குலத்தொழிலிலோ அவர் மனம் ஈடுபடாமல் சிவலோகநாதனின் சிந்தனையிலேயே நாட்டம் கொண்டது. ஆலய தரிசனங்களிலும், பகவந் நாமங்களை செப்புவதிலும், திருப்புகழிசை பாடுவதிலும் மனம் நாட்டம் கொண்டது. திருப்புன் கூருக்கு அடிக்கடி சென்ற நந்தனாருக்கு அவ்விறைவன்மேல் ஆற்றொணாக் காதல் பிறந்தது. அது அளப்பரிய பக்தியாக வளர்ந்தது. "தேனார் பொழில் திருப்புன்கூர்" உறை ஈசனை தரிசித்து கண்கள் பெற்ற பயனைப் பெறவேண்டுமென மனம் துடித்தது. ஆனால் ஏதோ வினைப்பயனால் தாழ்ந்த குலத்தில் பிறந்த அவர் அக்கால விதியின்படி கோவிலுக்குள் சென்று ஈசனைக் காணமுடியவில்லை. தேரடியில் நின்று தரிசிக்கவும் சிவலிங்கஸ்ரூபனின் முன்பு அமர்ந்துள்ள அருள்மிகு நந்தியெம்பெருமானின் பிரமாண்டமான வடிவு இறைவனின் திருவுருவை மறைத்தது. உடல் குறுகி, மனம் சோர்ந்து நின்றார் பரமபக்தர்.

"சிவலோக நாதன் திருச் சன்னிதானம்
மலையாகி நந்தி மறைத்திடுதே இங்கு"
என்று உள்ளம் உருகினார்.

"வழிமறைத்திருக்கிறதே - மலை போலே
ஒரு மாடு படுத்திருக்கிறதே"
என்று கலங்குகின்றார்.

"பலகாலஞ் செய்த பாழ்வினை குவிந்து மலையாகி இப்படி மறைத்ததோ" என்று கதறுகிறார். "தேரடியில் நின்று தரிசித்தாலும் போதும். கோவிலுள் வரமாட்டேன் ஐயனே" என்று கெஞ்சுகிறார். "ஓரடி விலகினால் போதும் இங்கே நின்று உற்றுப் பார்க்கச் சற்றே விலகாதோ மாடு" என்று இறைஞ்சுகிறார். உடனே ஐயன் ஓர் அற்புதத் திருவிளையாடலை அரங்கேற்றினான்.

பிறப்பிலே தாழ்ந்தாலும், பக்தியாலும், ஞானத்தாலும் உயர்ந்திருந்த நந்தனாரின் மாண்பை உலகோர் அறிய ஒரு திவ்ய லீலையைப் புரிகிறான் சிற்சபேசன். தன் பரம பக்தரான நந்திகேஸ்வரரை சந்நிதி மறைக்காவண்ணம் நகர்ந்து வழிவிடச் சொல்கிறார்.

*ஒரு காரியம் நிறைவேறும்வரை அவற்றைப்பற்றி அறிவாளி வெளியே சொல்லமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றே விலகியிரும் பிள்ளாய்!

சன்னிதானம் மறைக்குதாம்!

நற்றவம் புரிய, நம்மிடம் திருநாளைப் போவார் வந்திருக்கிறார்! என்று உத்தரவு இடுகிறார். "பூதலத்தில் இவனைப் போல் புண்ணிய புருஷன் ஒருவனில்லை" எனவும் போற்று கிறார். "பக்தியில் கரைகண்டவன் சித்தங் குறையில், நமது செல்வம் முற்றும் குறையும். தயவு செய்து சற்றே விலகியிரும் பிள்ளாய்" என்று நந்தி தேவனிடம் ஈசன் அன்புடன் வேண்டுகிறார்.

"கோதிலாக் குணமுடையோன் கோபங்கொண்டால், தாள மாட்டாய்! ஆதலால் என் சன்னிதானம் மறைக்காமல் சற்று நகர்ந்து அமர்வாய்" என்று உத்தரவு இடுகிறார். பவித்திரமான பக்தியின் சக்தியைகலி அன்று கண்டது! இறைவன் ஆணைக்கு உடன்பட்ட பிரம்மாண்டமான நந்திதேவன் "சரசர" என்று வலப்பக்கம் நகர்ந்து அமர்ந்தான்.

ஜோதிஸ்வரூபனான சிவலோக நாதனின் திவ்ய ரூபத்தை தேரடியில் நின்ற வண்ணம் பக்திப் பரவசத்துடன் தரிசித்தார். கலியுகத்தில் திருப்புன்கூர் திருத்தலத்தின் த்ரிஜன்ம பாவங்களை சம்ஹாரம் செய்யும் திருநீலகண்டனின் திருவிளையாடலைக் காண நாமும் திருப்புன்கூர் சென்று எம் பெருமானைத் தரிசிப்போமாக!

நந்தனாருக்கு தில்லைச் சிதம்பரம் போய் எம்பெருமானைத் தரிசிக்கவேண்டும் என்ற ஆவல் நாளுக்கு நாள் பெருகியது. எல்லோரிடமும் நாளை நான் சிதம்பரம் போவேன் என்று சொல்லிக்கொண்டேயிருப்பார். அதனால் அவருக்கு "திருநாளைப் போவார்" என்ற நாமமும் உண்டானது.

"நாளைப் போகாமல் நான் இருப்பேனோ
இந்த நாறும் உடலை நம்பிக் கெடுவேனோ"

என்று பாடியும், ஆடியும், அரற்றியும் சிதம்பரநாதனை நினைந்து உருகுவார். அவர் விவசாயத் தொழில் புரிந்து வந்த அந்தணரிடம் சிதம்பரம் போக உத்தரவு தருமாறு கேட்டார்.

"மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகுது ஙமயே
மனதைப் புண்ணாக்காமல் சிதம்பரம் போக உத்தரம்
தாருமையே"

என்று இரந்து நிற்பார்.

"சிதம்பர தரிசனம் சதுர் மறையோர்கள் செய்வது
ஞாயம் நீ கேட்பது மாயம் புலையா நீ
சேரிக்குப் போடா ஏரை உழுடா"

என ஏசி அனுப்புவார் அந்தணர்.

நாளுக்கு நாள் ஊண் உறக்கமின்று தில்லை நடராஜனை நினைந்து நினைந்து உருகி உருகி அழுவார், விழுவார், தொழுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தம் தெளிய மருந் தொன்றிருக்குது
பேரின்ப மொன்றுள்ளே
மற்ற மருந்துகள் தின்றலும் உள்ளுக்கு வல்லே
வல்லே ஐயே! அடிமை.
(பித்தம்)
பாம்பும் புலியும் மெய்ப் பாடுபட்டுத் தேடிப்
பார்த்துப் பயிரிட்டது
பாரளந்த திருமாயனும் வேதனும் பார்த்துக்
களித்த துண்டு
பார்வதி என்றொரு சீமாட்டி அதில்
பாதியைத் தின்ற துண்டு
இன்னும் பாதியிருக்குது புலையா
பாரேன் ருத்தரம் தாரும் தீரும்.
(பித்தம்)
ஊரைச் சொன்னாலும் இப் பாவம் தொலையும்
ஊழ்வினை ஊடறுக்கும்
பேரைச் சொல்லிப் புலம்புகின்றார் வெகு
பேர்களுக்குப் பிழைப்பு
சாரு நரை திரை தீர மருந்து
சாதியைப் பாராது இன்றும்
தீராத நோய்கள் படைத்த எனக்கு
தீரும் தீருமையே. (பித்தம்)

(தொடரும்...

---

ஆஞ்சநேயரின் பரம பக்தர் ஒருவருக்கு சொக்கட்டான் விளையாட ஆசை! தன்னுடன் சேர்ந்து விளையாட ஆஞ்சநேயரே வரவேண்டும் என விரும்பினார். எனவே மனமுருகி ஆஞ்சநேயரைப் பிரார்த்தித்தார். அவர் முன் தோன்றிய ஆஞ்சநேயரும் பக்தரது விருப்பதைப் பூர்த்திசெய்ய ஒப்புக்கொண்டார். ஆனாலும் ஒரு நிபந்தனை விதித்தார். "நான் விளையாட்டில் விட்டுக்கொடுக்க மாட்டேன். எனவே நீ தோற்றால் வருத்தப்படக்கூடாது" என்றார் அஞ்சனை புத்திரன். பக்தரும் சம்மதித்தார்.

இருவரும் விளையாட ஆரம்பித்தனர். பக்தர் ஒவ்வொரு முறையும் "ஜெய் அனுமான்" என்ற படியே காய்களை உருட்டினார். ஆஞ்சநேயர் "ஜெய் ஸ்ரீராம்" என்றபடி காய்களை உருட்டினார். ஒவ்வொரு முறையும் பக்தனே வெற்றி பெற்றான். "சரி அடுத்த முறை ஜெயிக்கலாம்" என்று ஆஞ்சநேயர் மீண்டும் மீண்டும் விளையாட வெற்றி பக்தனின் பக்கமே! மனம் வருந்திய ஆஞ்சநேயர் "ஸ்வாமி தங்கள் நாமத்தை உச்சரித்தும் எனக்கு தோல்வியா?" என்று ராமரிடம் பிரார்த்தித்தார். அவர் முன் தோன்றிய ராமன், "ஆஞ்சநேயா நீ என் பக்தன் ஆதலால், உன்னிடம் என் சக்தி இணைந்துள்ளது. அவனோ உனது பக்தன், ஆதலால் அவனது சக்தியுடன் நம் இருவரது சக்தியும் இணைந்துவிடுகிறது. இதுவே அவனது வெற்றிக்குக் காரணம்" என்றார்.

*வாழ நினைப்பவனுக்கு வானம்கூட வாயிற்படிதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திக்க முந்து சண்டைக்கு பிந்து

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

"ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே
வேற்றுமையை வளர்ப்பதனாலே விழையும் தீமையே"

இயற்கை என்பது இறைமையையே தன்னகத்தே உட்பொருளாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே தோற்றம்பெற்ற பிரபஞ்ச உற்பத்தியில் பரிணாமம் கொண்ட உயிர் இனங்களின் இறுதியாக பகுத்தறிவு கொண்ட மனித இனம் பார்முழுதும் அறிமுகமானது. ஆனால் பகுத்தறிவோடு படைக்கப்பட்டபோதும் இந்த மனிதனிற்கும் விலங்குகளிற்கும் பாரிய வேற்றுமைகள் எதுவும் தெரியப்பட்டதாக காணப்படவில்லை. அவைகள் விலங்குகளோடு விலங்குகளாகவே வாழ்ந்து வந்தனர். இதனால் இவர்கள் மனிதர்கள் என்று மாட்சிமை அடைய பாரிய மாற்றங்கள் ஏற்றங்கள் மற்றும் வழிமுறைகள் தேவைப்படுவது காலத்தின் கட்டாயம் ஆனதாகவே காணப்பட்டது.

இதனால் உலகெங்கும் இளையோடிய பண்பாட்டாளர்கள், படித்தவர்கள், புத்திஜீவிகள், அரும்பெரும் புலவர்கள் என்று உருவாவதற்கு இறைமையின் பார்வை இலக்காக அமையப் பெற்றது.

இதன் காரணமாக ஒருவர் இருவர் ஆகி இருவர் பலராகி பார் முழுதும் பரந்துபட்ட மனித சஞ்சாரம் உருவாகின. இந்த நிலையில் வாழ்வின் வடிவங்களை கண்டறிந்து அதன் வழிகளைப் பெருக்கி வாழ்வு என்பது என்ன? அதன் இயல்புகள் மற்றும் முறைமைகள் எப்படி என்பதிலேயே முழுக் கவனமும் செலுத்தப்பட்டது. வேறெந்த முயற்சிகளோ தேவைகளோ தென்படவில்லை. அவை தேவையும் இல்லை. அதற்கு நேரமும் இல்லை. இந்த ஆரம்ப காலமானது ஓர் அளவிற்கு ஆவலோடு மன எழுச்சியோடும் அருமை பெருமையாக முன்னெடுக்கப்பட்டது. வாழ்வு என்பது என்ன அதன் வடிவம்தான் என்ன வாழ்வதுதான் எப்படி என்ற வரையறைகள் தெரியாத மனிதன் நாளடைவில் அதன் வடிவங்கள் மற்றும் வழிமுறைகள் மாற மாற உள்ளங்கள் உசுப்பேறி குடும்பம் குலம் கோத்திரம் என்று விருத்தி கொண்டு நீதி நெறி நிதானம் என்று நேர்மை அற்ற நெட்டூர வழிகளைப் பின்பற்றி குழப்பம் நிறைந்த குடிமக்களாகவே வாழ்ந்து வந்தனர். இதனையே "குரங்காய் இருந்த மனிதன் மனதில் குழப்பம் ஏதும் இல்லை. குடும்பம் மனைவி அண்ணன் தம்பி கூட்டம் சிறிதும் இல்லை. ஆசையின் பாசம் காதலில் விழுந்தால் அமைதியைக் காணவில்லை அலைந்தான் தவித்தான் துடித்தான் மடிந்தான் யாருக்கும் லாபம் இல்லை" என்று அன்றைய மனிதர்களின் அலங்கோல நிலையை கற்பனையில் வடித்தான் கவிஞன் கண்ணதாசன்.

எந்த ஒரு நாடோ நாட்டு மக்களோ தங்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையோடு தங்கள் இயல்புகளை மேற்கொண்டு வாழ்க்கை என்ற வரம்பிற்குள் கட்டமைப்பான தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற வாய்ப்புண்டு. அதுவே வாழ்வின் வகி பாவங்களை, பெறுபேறுகளை வென்றெடுக்கும் வழிமுறைகளாக அமையப்பெறும்.

இதற்காகவே வாழ்வின் ஒழுங்கமைப்பை ஏற்படுத்தும் நீதி நிர்வாகம் கொண்ட கட்டமைப்பை, சட்டவாக்கங்களை, உருவாக்கி ஆட்சி அதிகாரத்திற்கு உற்பட்ட அரசன் ஒருவன் ஏகமனதாக நியமிக்கப்பட்டான். இந்த அரசனானவன் நல்ல நல்ல உபயங்களையும் விதிமுறைகளையும் கடைப்பிடித்து ஒரு குடையின்கீழ் ஒரே நிர்வாகத்தின்கீழ் அரசாட்சி செய்து மக்களை நன்நெறியில் வாழ வைப்பதையே தன் அடிப்படைத் தேவையாகவும் கடமையாகவும் கொள்பவன் ஆவான். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற சொற்பதத்திற்கு இணங்க அரசனானவன் தன் ஆட்சியை தக்கபடி நடாத்தும்போது மக்களும் குழப்பங்கள், கொந்தளிப்புகள், குரோதங்கள் இல்லாமல் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வோடும் சிறப்பாக வாழ முடியும். இதனால் அரசனும் மக்களால் மனம்குளிர மதிக்கப்படுவான்.

இத்தகைய வாழ்வுப் பயணம் ஏற்ற ஒரு குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்து வந்தது. இருந்தபோதும் இந்த அரசியல் அமைப்பானது அனுபவம் பழுக்கப் பழுக்க கனவு கள் நிலைக்க நிலைக்க வாழ்வின் காரசாரங்கள் தோன்றத் தோன்ற பேதங்கள் பிணக்குகள் பேராசைகள் உருவாக்கம் கொண்டன. இத்தகைய நிலமைகள் நிலைபெற்றுச் ஓங்கியவண்ணம் நாட்டு மக்களின் நலங்களின் நாட்டம் கொள்ளாமல் அரசனானவன் சுயநல வேட்கையோடும் சுக போகங்களோடும் தன் குடும்பம் தன் குலம் தன் நாடு என்ற பெரும் ஆதிக்கத்தில் நிறைந்து காணப்பட்டான். இந்த நிலைப்பாடு பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் இருக்கத்தான் செய்தது.

இந்த அரச அமைப்புக்கள் தங்கள் தங்கள் நலன்களைப் பேணி பட்டம் பதவிகளைப் பெற்று சரித்திரம் படைப்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டனர். நாட்டின்மீதோ மக்களின்மீதோ அக்கறையோடு அரசாட்சியில் ஈடுபடவில்லை. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற வாசகங்கள் தலைகீழாக மாறும் அளவிற்கு நீதி நெறிகள் எல்லாம் நிலை தடுமாறியே காணப்பட்டது. சாந்தி சமாதானம் சகிப்புத்தன்மை விட்டுக்கொடுப்பு என்ற பெறு நோக்கங்கள் பின்னடைவிற்கு உள்ளாகி போட்டி பொறாமை என்பனவே பெரும்பாலும் காணப்பட்டன. பண்பின் சிகரமாக விளங்கிய பகுத்தறிவு என்பது பாழும் அறிவாகவே எல்லோர் மனங்களிலும் மாட்சிமையின்றி மழுங்கடிக்கப்பட்டது. இதனையே "மனிதன் எல்லாம் தெரிந்துகொண்டான் வாழும் வகை புரிந்துகொண்டான் இருந்தபோதும் மனிதனுக்கு ஒன்றுமட்டும் தெரியவில்லை" என்று திரைப்பட கவிஞன் சித்தரித்தான்.

இத்தகைய பகுத்தறிவின் பயன்பாட்டை பார்முழுதும் பறைசாற்றி அதன் பக்குவத்தை வென்றெடுக்கத் தெரியாத உலகத் தலைவர்கள் தங்கள் தங்கள் பெருமைகளையும் பெரும்பேறுகளையும் நிலைபெறச் செய்யும் வண்ணம் பற்பல நாடுகளோடு புரிந்துணர்வுகள் ஒப்பந்தங்கள் என்று தொடர்பாடுகளை ஏற்படுத்தி வந்தார்கள். அப்படி இருந்து வந்தபோதும் ஈற்றில் எல்லா நடவடிக்கைகளும் பயனற்று முறிவடைந்து பகைமை ஏற்பட்டு போர்முனையில் புதுமோகம் காட்ட புறப்பட்டு எழுந்தார்கள்.

*கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளை இடுவதை அறிவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே உலக ஓட்டத்திற்கு முன் உதாரணமாக தோன்றிய மேதாவிகளினால் முன்மாதிரியான வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு மட்டுமல்ல அகில உலகம் முழுவதும் அவனது அற நூல்களின் அருமை பெருமைகளை ஏற்றிப் போற்றி ஆளுமையில் உள்வாங்கி நின்றது. பஞ்சமா பாதகங்களில் ஒன்றான மது பானம் மிகக் கொடிய நஞ்சாகும். அது உயிர் உள்ள அனைத்தையும் கொல்கிறது. இறந்த அனைத்தையும் பாதுகாக்கிறது. உடல் நலத்திற்கும் உள நலத்திற்கும் கேடு விளைவிப்பது. இதன் கேடான விளைவுகள் இளமையில் கல்வி சிலையில் எழுத்துப் போன்று மனதில் பதிவு கொள்ளும் பள்ளி மாணவருக்கும் மற்றும் அகிலத்து அனைவருக்கும் அள்ளித் தெளிக்கப்பட்டது. ஆனால் ஆட்சியின் திமிராலே அகந்தையின் செயலாலே சூழ்ச்சியும் வஞ்சகமும் சேரப்பெற்ற ஆட்சியாளர்கள் போர்முனைவில் புதுவேகம் காட்டும் மதுபாவனையில் படைப் பலத்தைப் பெருக்கி மெருகூட்டி பாழான உலக அழிவிற்கு வழி கோலினார்கள். எண்ணற்ற அணு ஆயுதங்களையும் நவீன போர்க் கருவிகளையும் உற்பத்தி செய்தும் கோடிக்கணக்கான உயிர்களை காவு கொள்ளும் கொடிய போர் முனைக்கு புத்துயிர் அழிக்கும் மதுப்பாவனையை இல்லாது ஒழித்தார்களா?

விளக்கு வைத்தால் ஆணும் பெண்ணும் சேர்ந்து குடிக்குது வசதியுள்ள குடும்பம் தினமும் நடக்குது. இது அதிகாரமும் அந்தஸ்தும் உள்ளவர்களின் அன்றாட நிகழ்வு. அடுத்து நான் குடிக்கிற மதுவே அது என்னைக் குடிக்குதடா நான் நடக்கும்போது என்னைப் பார்த்து நாய் சிரிக்கிறதடா. இது நாட்டு மக்களின் நாளாந்த நடவடிக்கை.

அரசர்களும் ஆக்கிரமிப்பாளர்களாலும் அலங்காரம் செய்யப்பட்ட இந்தப் போராட்ட நிலங்களில் இன்றும் மண்ணுயிர்கள் ஏதும் தோற்றம்பெறும் வாய்ப்புக்கள் கிட்டவில்லை. போரின் தாக்கம் இன்னும் தீர்ந்தபாடில்லை. அதன் மணமே இருந்தும் மாற்றம்கொள்ளவில்லை.

உலக ஒற்றுமைக்கு முகம் கொடுத்து சந்திப்புக்களை முன்னெடுத்து சண்டைக்கு பிந்தி நின்றால் இத்தகைய பேர் அவலங்கள் பேரழிவுகள் துளிகூட விட்டிருக்குமா? இந்த எண்ணற்ற அனர்த்தங்கள் தோற்றம் பெறுமா? இப்படிப்பட்ட போர்முரசு ஒன்றும் இனிமேலும் வேண்டுவதில்லை என்று உலக உத்தமர்கள் ஒன்றுகூடி உருவாக்கப்பட்டதே உலக சமாதான சபை என்ற ஐநா சபையின் தீர்மானங்களாகும். ஆனால் இச் சபையின் தீர்மானங்கள் இன்றுவரையும் நிறைவேறும் சாத்தியங்கள் நின்று உலவுகிறதா இன்றோ நாளையே என்றோ எப்போதோ என்று மழை முடிந்ததும் தூவாணம் விட்டவாறு இல்லை என்ற நிலையே இன்றும் காணப்படுகின்றது.

---

விருப்பமில்லாமல் எந்தச் செயலையும் நாம் செய்யக்கூடாது. கடவுள் வழிபாடு ஆகட்டும், பிள்ளைகளின் படிப்பு, திருமணம் எதுவாக இருந்தாலும் மனதுக்கு நூறு சதவீதம் விருப்பமாக இருப்பதையே செய்யவேண்டும். சரி ஏதோ இருந்துவிட்டுப் போகட்டும். பிறகு பார்த்துக்கொள்ளலாம் என நாம் இலகுவாக விட்டுவிடும் செயல்கள் பின்னர் பெரும் நஸ்டமும் கஸ்டமுமாக முடிந்துவிடும். ஆதலால் நாம் செய்யும் செயல்கள் அனைத்திலும் முழு ஈடுபாட்டையும் உள்ளன்பையும் காட்டவேண்டும்.

*அரிய காரியங்களைச் செய்ய பெரிய உழைப்பு வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு குமார் | கனடா | 832,000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஆ. குணசீலன் | கொடிகாமம் | 10000. 00 |
| திரு சாந்தகுமார் குடும்பம் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு ஏகநாதன் குடும்பம் | சண்டிலிப்பாய் | 2500. 00 |
| இ. தனபாலசிங்கம் | அச்சுவேலி | 20000. 00 |
| ந. சண்முகநாதன் | இணுவில் | அரிசி, மரக்கறி 5000. 00 |
| த. தேவலட்சுமி | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| S. விஜித்குமார் | நவாலி | 20000. 00 |
| திரு கோவிந்தன் குடும்பம் | உரும்பராய் | 5000. 00 |
| க. பாலசுப்பிரமணியம் | கரணவாய் | 10000. 00 |
| திரு திருச்செல்வம் குடும்பம் | சுவிஸ் | 37600. 00 |
| திரு முருகதாஸ் குடும்பம் | சுவிஸ் | 10000. 00 |
| இ. நந்தகுமார் | புத்தூர் | 10000. 00 |
| கு. தர்ஷன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| T. நடேசன் | கோண்டாவில் | 25000. 00 |
| ரா. பாலரஜீவன் | சுவிஸ் | 5000. 00 |
| ரா. ரஜீதன் | சுவிஸ் | 5000. 00 |
| த. பாலசுப்பிரமணியம் | இணுவில் | 5000. 00 |
| திரு நந்தகுமார் குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு கிருஷ்ணசாமி குடும்பம் | கிளிநொச்சி | 5000. 00 |
| திரு தவராஜா குடும்பம் | பிரான்ஸ் | மரக்கறி, 2மூடை அரிசி 5000. 00 |

*நேரத்தைத் தாமதப்படுத்தினால் தீமையான முடிவையே தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சசிகலா குடும்பம் | நெதர்லான்ட் | 5000. 00 |
| திரு கதிர்காமநாதன் குடும்பம் | கோண்டாவில் | 1000. 00 |
| N. சுரேஸ் | சுழிபுரம் | 5000. 00 |
| திரு சதானந்தன் குடும்பம் | தொல்புரம் | 5000. 00 |
| S. செல்வரட்ணம் | சுழிபுரம் | 1000. 00 |
| இ. ஸ்ரீராம் | சுழிபுரம் | 5000. 00 |
| ஜீ. இலக்கியா, ஜீ ஓவியா | அளவெட்டி | 20000. 00 |
| ரா. நமீஸ் | ஜேர்மன் | 5000. 00 |
| செ. முத்துலிங்கராஜா | ஜேர்மன் | 5000. 00 |
| ந. சிவனேசன் | இணுவில் | 1000. 00 |
| ப. குமரேஸ் | பருத்தித்துறை | 10000. 00 |
| கி. சிவலிங்கம் | கோயிற்கடவை | 1000. 00 |
| திரு வினோதன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| திரு தம்பிஐயா குடும்பம் | குப்பிளான் | 10000. 00 |
| சிவலிங்கம் பரமேஸ்வரி | மானிப்பாய் | 50000. 00 |
| N. ஆதவன் | குப்பிளான் | 6000. 00 |
| T. சிவகுமார் | அரியாலை | 5000. 00 |
| ரஞ்சிதமலர் வசந்தகுமார் | வல்வெட்டி | 25000. 00 |
| திரு ஜெகநாதன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| S. ராஜமகிந்தன் | சரசாலை | 5000. 00 |
| ம. மதுஷன் | சரசாலை | 1000. 00 |
| திரு பத்மராஜ் குடும்பம் | பத்தமேனி | 10000. 00 |
| த. ஜெயக்குமார் | இணுவில் | 25000. 00 |
| உ. உமேஷன் | நீர்வேலி | 5000. 00 |
| P. பெரியசாமி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| அ. கந்தசாமி | கதிரிப்பாய் | 2000. 00 |
| து. ஜஜித்திரன் | பெல்சியம் (முதியோர்களுக்கு) | 10000. 00 |
| அ. டினுஜன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பொ. குகனேஸ்வரன் | கோண்டாவில் | 5000. 00 |
| மு. ராஜகுமாரன் | மானிப்பாய் | 25000. 00 |
| மு. கோகுலநாதன் | அராலி வடக்கு | 10000. 00 |
| த. பிரகாஸ் | அல்வாய் | 10000. 00 |
| க. தருண் | இணுவில் | 5000. 00 |
| சி. சிவசுதன் | சுன்னாகம் | 5000. 00 |
| க. சேகர் | லண்டன் | 5000. 00 |
| திரு தயாளசிங்கம் குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| திரு பாலகிருஷ்ணன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |

*ஊக்கமுள்ள மனிதன் தன் கடமையைச் செய்யத் தவறுமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முருகன் அடியான் | புத்தூர் | 10000. 00 |
| நே. நேசா | லண்டன் | 5000. 00 |
| திரு சிவசுதன் குடும்பம் | மூளாய் | 5000. 00 |
| சு. செல்வராசா | நீர்வேலி | 4500. 00 |
| இ. அரிச்சந்திரநாதன் | நீர்வேலி | 500. 00 |
| ல. ரிஷிகேசன் | கொழும்பு | 5000. 00 |
| வே. சிவகாமி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வ. சசிகரன் | சுதுமலை | 5000. 00 |
| பா. அபிராஜ் | சுவிஸ் | 50000. 00 |
| பாலமனோகான் கந்தையா | கனடா | 10000. 00 |
| முல்லைவேந்தன் ஆரன் | கனடா | 5000. 00 |
| சி. பத்மா | சுவிஸ் (நெல்லியடி) | 2000. 00 |
| ப. திருநாவுக்கரசு | காரைநகர் | 2000. 00 |
| B. ஸ்ரீபவன் | வல்வெட்டித்துறை | 2மூடை அரிசி |
| தி. வசந்தன் | மருதங்கேணி | 5000. 00 |
| திரு ராசகிருஷ்ணா குடும்பம் | கரவெட்டி | 5000. 00 |
| செ. சிவலிங்கநாதன் | கொடிகாமம் | 15000. 00 |
| நரேஸ் சங்கரி | தையிட்டி | 5000. 00 |
| த. மயூரதன் | ஏழாலை | 5000. 00 |
| பாஸ்கரன் பாமதி | கொழும்பு (வல்வெட்டித்துறை) | 25000. 00 |
| திரு யுவகுலராஜா குடும்பம் | மானிப்பாய் | 5000. 00 |
| திரு சின்னத்துரை குடும்பம் | கோண்டாவில் | 6000. 00 |
| தெ. நவநீதன் | புத்தூர் | 5000. 00 |
| ந. ஆறுமுகம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| அ. புவனேஸ்வரி | கொழும்பு | 5000. 00 |
| திரு சஞ்சீவன் குடும்பம் | காரைநகர் | 5000. 00 |
| S. சுசான் | அச்சுவேலி | 5000. 00 |
| க. நாதன் | கொடிகாமம் | 5000. 00 |
| ம. பிரதீபன் | சங்குவேலி | 1000. 00 |
| இ. அருள்தேவி | தம்பாலை | 5000. 00 |
| செ. விஸ்வகாந்தன் | வெள்ளவத்தை | 1000. 00 |
| ச. கியூமிகா | ஹம்பகா | 500. 00 |
| உ. பாமினி | வேலணை | 1000. 00 |
| ச. குகன் | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு ஸ்ரீதரன் குடும்பம் | சுழிபுரம் | 5000. 00 |
| சி. சுகந்தினி | பிரான்ஸ் | 2000. 00 |
| லி. விஜிதா | சுவிஸ் | 5000. 00 |
| தி. விமலன் | புத்தூர் | 1500. 00 |

(தொடரும்...

*குறிக்கோளை அடைய விடாமுயற்சிதான் முக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் திருத்தணிகை மலை

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

தேவர்களின் அசுரத்துவமாகிய துன்பம் நீங்கும்படி போர் செய்து அசுரர்கள் எல்லோரையும் அழித்து தேவர்களுக்கு பழைய வாழ்க்கையைக் கொடுத்த முருகப் பெருமானுக்கு தமிழ் நாட்டில் ஆறுபடை வீடுகள் உள்ளன. இவற்றுள் திருத்தணி என்பது ஐந்தாவது படைவீடாகும். இத் திருத்தணிமலை தொண்டைநாடு என்று சொல்லப்படும் இடத்தில் இருப்பதாக பெரியோர் கூறுவர். அதாவது சென்னையிலிருந்து வடமேற்குப் பக்க மாக 84 கிலோமீற்றர் தூரத்தில் இருப்பதும் முருகப்பெருமான் திருச்செந்தூரில் சூரபன்மனது ஆணவத்தை அடக்கி அவனை சேவலும் மயிலுமாக ஆட்கொண்டபின் இம் மலைக்கு வந்து இருந்து கோபம் குறைந்த புண்ணியத்தலமும் இத்துடன் முருகப்பெருமான் வள்ளி அம்மையாரை திருமணம் செய்யும் நோக்கமாக நம்பியரசன் முதலாகச் சொல்லப்படும் வேடர்களுடன் செய்த திருவிளையாடல் என்னும் போரை முடித்து இங்கு வந்து கோபம் குறைந்து வீற்றிருந்த திருத்தலம் என்பதனால் இம் மலை அன்று தொடக்கம் செருத்தணிகை மலை என்ற பெயரைப் பெற்றது.

இத்துடன் இம்மலையின் நடுவே முருகப்பெருமான் வீற்றிருக்கும் ஆலயம் நான்கு பக்கமும் நான்கு கோபுரங்களுடன் இருப்பது பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது. இத்துடன் தேவர்கள் அசுரர்களுக்குப் பயந்து துன்புற்றார்கள். அப்போது இப் பயம் குறையும்படி இங்கே வந்து தங்கிய தலமுமாகும். அடியார்கள் இவ்வாலயத்துக்கு நடந்து செல்வதற்காக இம் மலையில் 365 படிகள் உள்ளன. இத்துடன் இவ்வாலயத்தில் கந்தசஷ்டி விரத காலத்தில் சூரன்போர் நடப்பதில்லை. என்ன காரணமென்றால் முருகப் பெருமான் கோபம் குறைந்து இருந்த தலமென்பதால் நைமித்தியக் கிரிகைகள் மட்டும் நடைபெறுவது வழக்கமாகவுள்ளது. முருகப்பெருமான் வள்ளியம்மையாரை களவு முறையில் திருமணம் செய்தபின் நம்பியரசன் முருகப்பெருமானையும் வள்ளியம்மையாரையும் தமது சிற்றூரிலுள்ள சிறு குடிசைக்கு அழைத்துவந்து புலித்தோலாசனத்தில் வீற்றிருக்கும்படி இருத்தினார். அப்போது முருகப்பெருமான் தமது பக்கமாகவுள்ள வள்ளியம்மையாரை அன்போடு பார்க்க வள்ளியம்மையாரிடத்தில் இவ்வளவு காலமும் இருந்த வேட்டுவக் கோலம் நீங்கிப் பழைய தெய்வீகக் கோலம் முழுவதும் வந்து சேர்ந்தது. அங்கிருந்த நம்பியரசனும் அவனுடைய மனைவியும் ஏனைய சுற்றத்தாரும் வள்ளியம்மையாரின் தெய்வீகக் கோலத்தைப் பார்த்து மகிழ்சியடைந்து இவள் எங்கள் குலத்தில் வந்தது நாம் செய்த தவப்பயனாகும் என்றார்கள். இதன் பின்பு நம்பியரசன் நல்ல சுபமூகூர்த்தத்தில் சுப்பிரமணியப் பெருமானது திருக்கரத்தில் வள்ளியம்மையாரின் திருக்கையை வைத்து நாம் செய்த தவப்பயனால்

*இலக்கு இல்லாத மனிதன், சுக்கான் இல்லாத கப்பலைப் போன்றவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வளர்ந்த நம் புதல்வியை அன்போடு தேவரீருக்குத் தத்தம் செய்தேன் ஏற்றருள்க என்று சொல்லி தண்ணீரை வார்த்து கன்னிகாதானம் செய்தான்.

அந்தநல் வேலைதன்னில் அன்புடைக்குறவர் கோமான்
கந்தவேள் பாணிதன்னில் கன்னிகை கரத்தை நல்கி
நம்தவம் ஆகிவந்த நங்கையை நயப்பால் இன்று
தந்தமை கொள்க என்றுதண் புனல்தாரை உய்த்தான்.

அப்பொழுது நாரத முனிவர் முருகப்பெருமானது ஆசியுடன் வேத விதிப்படி திருமணக் கிரியை செய்யத் தொடங்கினார். அந்த நேரத்தில் சிவபிரான், பிரமா, விஸ்ணு முதலிய தேவர்கள் பிறரும் தம்மைச் சூழ்ந்து நிற்க உமாதேவியாரோடு ஆகாயத்தில் எழுந்தருளி வந்து இத் திருமணத்தைப் பார்த்து திருவருள் புரிந்து நின்றார். இதனைத் தொடர்ந்து தேவர்கள் மகிழ்ந்து பூமழை சொரிந்து வாழ்த்தினர். இதன் பின்பு சிவபிரானும் சிவபிராட்டியும் தேவர்களுடன் மறைந்தருளினார். நம்பியரசனும் மனைவியும் சுற்றத்தாரும் வாழ்த்துக்களைச் சொல்லி வணங்கினர். நாரத முனிவர் செய்த திருமணக் கிரிகையும் நிறைவேறியது. பின்பு முருகப்பெருமானும் வள்ளியம்மையாரும் நம்பியரசனால் தேக்கிலையில் படைக்கப்பட்ட சிற்றுண்டிகளை உண்டு திருவருள் செய்தனர். பின்பு முருகப்பெருமான் வள்ளியம்மையாரோடு செருத்தணிகை மலையில் சென்று வீற்றிருப்போம் என்று நம்பியரசனைப் பார்த்து கூறுதலும் அவன் இதற்கு நல்லது என்று சொல்லி உடன்பட்டான். முருகப்பெருமான் நம்பியரசனுக்கு திருவருள் செய்து எல்லோரும் வாழ்த்தி வணங்க சிற்றூரை நீங்கி வள்ளியம்மையாரும் தாமுமாக வள்ளிமலையை நீங்கி ஆகாயமார்க்கமாகச் சென்று செருத்தணி மலையை அடைந்து அங்குள்ள ஆலயத்துள் புகுந்து இவ்வுலகத்து உயிர்கள் உய்யும்படி வீற்றிருந்தார்.

இப்படியாக சண்முகப்பெருமானும் வள்ளியம்மையாரும் செருத்தணிமலை ஆலயத்துள் வீற்றிருக்கும்போது வள்ளியம்மையார் அவரை வணங்கி சுவாமி இந்த சிறந்த மலையின் பெருமை களை அடியேனுக்கு சொல்லியருள வேண்டும் என்று கேட்க சண்முகப்பெருமான் இம் மலையின் சிறப்புக்களை ஆன்மாக்களும் அறிந்து உய்யும் பொருட்டு பின்வருமாறு கூறுவார்.

வள்ளிநாயகியே யாம் சூரபன்மனோடு செய்த போரினும் உங்கள் சுற்றத்தவர்களோடு செய்த போரிலும் கோபம் குறைந்து இங்கே யான் இருத்தலால் இம்மலை செருத்தணி என்ற ஒரு காரணப்பெயரைப் பெற்றது. இத்துடன் ஏகாம்பரநாதர் என்று சொல்லப்படும் சிவனுக்கு பூசை வழிபாடுகள் செய்த காஞ்சி மாநகரத்துக்குப் பக்கமாக இம் மலை இருத் தலால் இதனுடைய தூய்மை ஒருவராலும் சொல்லமுடியாததுவாகும். இத்துடன் மலர்களுள் தாமரை மலர் சிறந்ததுபோலவும் நதிகளுள் கங்கைநதி சிறந்ததுபோலவும் புண்ணியத் தலங்களுள் காஞ்சிபுரம் சிறந்ததுபோலவும் மலைகளுக்குள் இச் செருத்தணி மலை சிறந்தது. இத்துடன் பல வாத்தியங்கள் ஒலிக்க யாம் இம் மலையில் விளையாடுவோம். சிவனுக்கு மந்தரமலை மேருமலை முதலான பல மலைகள் இருந்தாலும் திருக்கைலாச மலையையே விரும்பி வீற்றிருப்பதுபோல இப்பூமியில் பல மலைகள் இருந்தாலும் யாம் இச் செருத்தணிமலையில் அன்போடு எப்போதும் வீற்றிருப்போம். இதற்கு ஒரு காரணம்

*துணிச்சலோடு உழைப்பவனுக்குத்தான் வெற்றி அருகில் வந்து அமரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது இந்திரன் எமக்கு நாள்தோறும் சாத்தும் பொருட்டு மூன்று நீலோற்பலங்களை இங்குள்ள குளத்தில் வைத்தான். இதில் காலைப் பூசைக்கு எருமலர், உச்சிக்காலப் பூசைக்கு ஒரு மலர், மாலைப் பூசைக்கு ஒரு மலராகப் பூக்கும். ஆதலால் வள்ளி அம்மை யாரே இம் மலையின் பெருமையை யார்தான் சொல்லவல்லார்கள்.

இந்த மலையை வணங்குபவர்களுடைய பாவம் எல்லாம் நீங்கும் யார் இந்த மலைக்கு வந்து இங்குள்ள குளத்தில் முழுகி எம்மை அன்போடு வணங்குபவர்கள் யாரோ அவர்கள் நம் பதவியைப் பெற்று வாழ்வார்கள். இத்துடன் ஒருவர் இம் மலைக்கு வந்து ஐந்து நாட்கள் தங்கி எம்முடைய பாதங்களை தஞ்சமென்று நினைத்து வழிபடுகின்ற அடியவர்கள் தாம் நினைத்த போகங்கள் எல்லாவற்றையும் அனுபவித்து பின்பு முத்தியடைவர்.

அஞ்சு வைகல் இவ்அகன் கிரிநண்ணி எம்அடிகள்
தஞ்சம் என்று உளத்து உன்னியே வழிபடுகின்ற தவத்தோர்
நெஞ்சகம் தனில் வெ.'.கிய போகங்கள் நிரப்பி
எஞ்சல் இல்லது ஓர்வீடுபேறு அடைந்து இனிது இருப்பர்.

இந்த செருத்தணி மலையில் வாழ்வோர் ஒரு தருமத்தைச் செய்தாலும் அந்தத் தருமம் பலபல தருமங்களாக வளரும் இவர்கள் பாவங்கள் பலவற்றைச் செய்தாலும் அப் பாவம் தேய்ந்து தேய்ந்த ஒன்றாகும். இதுவுமல்லாமல் இன்றும் அநேக கோடி அற்புதங்கள் இங்குள்ளன என்று இப்படியாக முருகப்பெருமான் செருத்தணி மலையின் பெருமைகளைக் கூற வள்ளியம்மையார் கேட்டு மகிழ்ச்சியுற்று இருக்க பின்பு முருகப்பெருமான் வள்ளியம்மை யாரும் தானுமாக அங்கே அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தை ஆகம விதிப்படி ஸ்தாபித்து மிகுந்த அன்புடன் பூசனைசெய்து வணங்கி திருவருளைப் பெற்று வள்ளியம்மை யாருடன் சில நாட்கள் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தார் இச் செருத்தணிமலையில்.

தணிகை என்ற சொல்லுக்கு (பொறை) என்பது பொருளாகவுள்ளதால் அடியார்களின் பாவங்களையும் பிழைகளையும் பொறுத்து அவர்களுக்கு திருவருள் புரியும் தலமாதலால் இத் தலத்துக்கு திருத்தணிகை மலை என்னும் பெயரே பொருத்தமானதாகும். அருணகிரிநாதர் இத் திருத்தணிகை முருகப்பெருமான்மீது பாடிய திருப்புகழ் பின்வருமாறு

நினைத்த தெத்தனையிற் தவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமல்
கனத்த தத்துவமுற் அழியாமல்
கதித்த நித்திய சித் அருள்வாயே
மனித்தர் பத்தர் தமக் எளியோனே
மதித்த முத்தமிழில் பெரியோனே
செனித்த புத்திரரில் சிறியோனே
திருத்தணிப் பதியிற் பெருமானே.

திருமால் தாரகாசுரனுடன் போர் செய்து தமது சக்கரப்படையை இழந்தார். பின்பு முருகன் அச் சக்கரப்படையை திருமாலுக்கு மீண்டும் கொடுத்த தலமுமாகும்.

முருகப்பெருமான் திருவடிகள் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருப்புகழைக் கற்றார் கரையேறுவார்

– *திரு துரை. கணேசமூர்த்தி* அவர்கள் –



**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விளக்க உரைகளிலிருந்து தொகுப்பாக்கம் செய்யப்பெற்றது)**

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்"

## திருப்புகழ் உரை செய்தருளிய திருமுருக கிருபானந்த வாரியாரின் வாழ்க்கைப் பதிவுகள்

வேலை வணங்குவதே வேலை... என்றவாறு அகத்தழகிலும் புறத்தொழுங்கிலும் செம்மையுற வாழ்ந்து முருக பதம் பெற்றுய்த சான்றோராக கிருபானந்த வாரியார் விளங்குகிறார். தன்னுடைய முருக பணியின் நிமித்தமாக அருள்மொழியரசு, அமுதமொழிக் கொண்டல், கலைமாமணி, கௌரவ முனைவர், தமிழ்ப் பேரவைச் செம்மல், அருளுரைமுத்து, திருப்புகழ் ஜோதி போன்ற ஏராளமான விருதுகளை பெற்றுக்கொண்டதுடன் இசைச் சொற்பொழிவாளராக, விரிவுரையாளராக, உரையாசிரியராக, நூலாசிரியராக, கதாசிரியராக, பத்திரிகையாளராக, திருத்தொண்டராக, சமூகப்பணியாளராகவும் பன்முகப் பணிகளையும் ஆற்றி அழியாப் புகழைப் பெற்றவராகத் திகழ்கின்றார்.

தமிழகத்தில் வேலூரின் அருகேயுள்ள கங்கேய நல்லூர் என்கிற ஊரிலே புராண இதிகாசப் பிரசங்க பண்டிதர் மல்லையதாசர் கனக வல்லியம்மை தம்பதிகளுக்கு ஆயிரத்து தொளாயிரத்து ஆறாம் ஆண்டு ஆவணி ஒன்பதாம் நாள் சுவாதி நட்சத்திரத்தில் அருந்தவப் புதல்வராக கிருபானந்தர் அவதரித்தார். இவர் தனது இளமைப் பருவத்திலே தந்தையாருடன் பிரசங்கங்களுக்குச் சென்று பிற்பாட்டுப் பாடுவதிலும், கையேடு வாசிப்பதிலும் ஈடுபாடு காட்டியதோடு, புராண இதிகாசங்களை நன்னூல், தொல்காப்பியம் முதலாய இலக்கண நூல்களைக் கற்றும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் தனது பத்து வயதிலேயே பத்தாயிரத்திற்கும் அதிகமான திருப்புகழ் முதலாய பாடல்களை மனனம் செய்து படித்து வந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய கிருபானந்தர் தனது பத்தொன்பதாவது வயதில் மாமன் மகளான அமிர்தலக்சுமியைக் கரம்பிடித்து இல்லற வாழ்வை நல்லறமாகக்கொண்டும் இசைச்சொற்பொழிவாற்றுதலை பிரதான பணியாகக் கொண்டும் வாழ்ந்து வரலாயினர். இக்காலப் பகுதியில் திருப்புகழுக்கு உரையெழுதி "திருப்புகழமிர்தம்" என்ற மாத இதழை முப்பத்தியைந்து வருடகாலமாக வெளியிட்டு வந்ததால் "திருப்புகழ் ஜோதி" என்கிற பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இத்தகைய வெளியீடுகளுக்கேதுவாக சிந்தாதிரிப்பேட்டை என்ற இடத்தில் பதிப்பகம் ஒன்றை நிறுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தார். இவ்வாறு சொற்பொழிவுகள், பதிப்புகள்மூலம் பெற்றுக்கொள்கின்ற வருவாய்களை தெய்வீகத் திருப்பணிகளுக்கே கொடுத்து வந்தார். இவ்வாறு தனது சொந்த ஊரில் அமையப்பெற்ற காங்கேய நல்லூர் முருகன் திருக்கோவில் திருப்பணிகளையும், வயலூர் முருகன் கோவில் திருப்பணிகளையும், வள்ளிமலை இராஜ கோபுரத் திருப்பணிகளையும் சிந்தாதிரிப்பேட்டை முருகன் கோவில் திருப்பணிகளையும் முன்நின்று செய்து வைத்ததோடு "அருணகிரிநாதர் அறச்சாலை" என்பதை நிறுவி அறப் பணிகளை ஆற்றியும் வந்தார். இத்தகைய தர்மகாரியங்களை முன்நின்று செய்தாற்றிய திறத்தைப் பாராட்டிய காஞ்சிப் பெரியவர் இவரை அறுபத்து நான்காவது நாயனார் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

வயலூர் முருகன்பால் இவர் கொண்டிருந்த பேரன்பின் காரணத்தால் ஐம்பது காசு கொடுத்து வெள்ளியங்கி சாத்தி முருகனை வழிபட்டபோது கோவில் தர்மகர்த்தாவின் கனவில் வந்த முருகபிரான், என்னை வழிபடவந்த பக்தனிடம் காசு வேண்டியா... பூசை செய்வீர்கள் என வினவியதாகவும்... உடனே திடுக்குற்றுப்போன தர்மகர்த்தா வாரியாரின் விலாசத்தைப் பெற்று அந்தப் பணத்தை தபாலில் அனுப்பியதாகவும் சொல்லப்படுகிறது. அன்றிலிருந்து வாரியார் சுவாமிகளும் வயலூர் முருகனின் திருப்பணிகளில் தன்னையும் இணைத்து செயற்பட்டு வந்ததோடு தனது பிரசங்கங்களின் தொடக்கத்தில் "வயலூர் முருகனை வணங்கி" என்று குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது.

ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டில் வாரியார் சுவாமிகளது வாழ்க்கைத் துணைவியார் இவ்வுலக வாழ்வைவிட்டு இறைவனடி எய்திய தருணத்தில் சுவாமிகள் மிகுந்த சோகத்திலிருந்தவிடத்தும் இவ்வுலக வாழ்வின் நிலையாமையை உணர்ந்து கூடியிருந்தவர்களிடம் பின்வருமாறு கூறியிருந்தாராம். "வாழ்க்கை என்பது ஓடும் ரயில் பயணம், அதில் அவளுக்குரிய ஸ்ரேசன் வந்ததும் இறங்கி விட்டாள்... அடுத்தடுத்த ஸ்ரேசன்களில் நாமும் இறங்கிக் கொள்ளலாம். ஆனாலும் முருகனுடைய பணியின் நிமித்தமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பொழுதிலேயே எனது மூச்சும் முருகன் கழலடி சென்றுவிட வேண்டும் என்றாராம். இவ்வாறு பக்தி வைராக்கியமும் ஆன்ற புலமையும் கொண்டிருந்த வாரியார் சுவாமிகள் திருமுருகனது புகழை இவ்வுலகெலாம் உணர்த்தும் பொருட்டு ஒருசில திரைப்படங்களிலும் பங்கேற்று பக்திப்பரவச மூட்டியிருக்கின்றார். அவ்வகையில் தேவர் பிலிம்ஸ் தயாரித்தளித்த தெய்வம். திருவருள் போன்றவற்றை குறிப்பிடுவதோடு வாரியார் சுவாமிகள் சிவகவி என்ற திரைப்படத்திற்கான திரைக்கதையையும் தானே எழுதியதாகச் சொல்லப்படுகிறது. ஆதலினால் முருகனது திருவருட்திறத்தை எடுத்தியம்பிச் செல்வதற்காக பயன்பாட்டிலுள்ள அத்தனை ஊடகங்களையும் இவர் உபயோகித்திருக்கின்றார் என்பது புலனாகிறது.

ஒருமுறை வள்ளிமலை குடமுழுக்கு வைபவத்திற்கு வாரியார் சுவாமிகள் சென்று கொண்டிருந்தபோது அரியலூர் என்கிற இடத்திலே இவர் பயணம் செய்யவேண்டிய ரயில் வண்டி புறப்பட்டுச் சென்றுவிட்டதால் அடுத்த ரயிலுக்காக காத்திருந்தபோது முதற்சென்ற

*எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றி இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில் விபத்துக்குள்ளாகிய சம்பவத்தைக் கேள்வியுற்று இதனாற்றானோ என்னை இவ்வகையாகத் தாமதப்படுத்தி வைத்தாய் தாயே என்று அந்த வள்ளிமலைத் தாயை கண்ணீர மல்கத் துதித்தாராம். இவ்வாறு தான் செல்லுமிடங்களிலெல்லாம் தனது சுய அனுபவங்கள் ஊடாக பெற்றுய்த சம்பவங்களையும் பிரசங்கங்களின்போது வாரியார் சுவாமிகள் எடுத்துரைக்கத் தவறுவதில்லை.

திருமுருகனுடைய புகழை தனது இசைத் திறனாலும் சொற்பெருக்காற்றும் வாண்மையாலும் எடுத்துரைப்பதுபோன்று இராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றில் வருகின்ற சம்பவங்களையும் தனித்தனி விடயங்களில் சொற்பொழிவாற்றி வந்ததுடன் சங்கப் புலவர்களின் வரலாறுகள் மன்னர் பெருமக்களின் திறன்கள், சித்தர் பெருமகான்களின் வரலாற்றுண்மைகள் என்பவற்றையும் கருத்தாழம் மிக்கதாக தனது சொற்பெருக்காற்றுகைகளில் எடுத்தியம்பி வரலானார்.

இவ்விதம் காலம், நேரம், இடம் என்பதெல்லாம் கருதாது இறைபுகழையும் தமிழின் பெருமையையும் இவ்வுலகமெல்லாம் இசைபட எடுத்தியம்பிவரும் வேளையில் வயதின் மூப்பும், உடலில் தளர்ச்சியும் வந்துற்றபோதிலும் அவரது பொக்கை வாயிலிருந்து தெய்வத் தமிழ் வற்றாத அருவியாகப் பல்கிப் பெருகியது. ஞானமும் மேன்மையும் உள்ளத்திலும் உடலிலும் நீங்காது நிலைபெற்றது. தாயகமெங்கிலும், கடல் கடந்தும் முருகனின் திருப்புகழை உரத்துச் சொல்வதில் தீராத வாஞ்சையுடன் வாரியார் சுவாமிகள் செயற்பட்டு வந்தார். இவ்வாறு இலண்டன் மாநகரிலுள்ள அடியவர்களின் வேண்டுதல் காரணமாக முருகப்பெருமானது புகழியம்பச் சென்றிருந்தவேளையில் விமானத்துக்குள்ளேயே சுவாமிகளின் உடல்நிலை பாதிப்படையத் தொடங்கியது. இதன் காரணமாக இலண்டனில் ஒருசில மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றபோதிலும் உடல்நலம் சீராகவில்லை. மீண்டும் தாயகம் நோக்கி வந்தார் சுவாமிகள். அப்போது ஒருசில அடியவர்களும் சுவாமிகளுடன் கூடவே வந்தனர். மும்பாயில் வந்திறங்கிய பின்பு மீனம்பாக்கம் செல்கின்ற விமானத்தில் சுவாமிகளை ஏற்றுகின்றனர். விமானம் புறப்பட்டு திருப்பதி தாண்டி பறக்கின்ற தறுவாயில்... கந்தவேளே... உன் கழலடியினைச் சேர்க்கக் கருணை கொள்வாய் என்று வாரியார் சுவாமிகள் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்திலே அந்த விமானம் திருத்தணிகைமேல் பறந்து கொண்டிருந்ததாகவும் அக்கணமே வாரியார் சுவாமிகள் மூச்சு மெல்ல மெல்ல அணைந்து சென்றதாகவும் அவ்விடத்துக் கூட இருந்த சாத்தூர் இராஜேந்திரன் என்கின்ற அடியவர் கூறியிருக்கின்றார். அந்தத் திருத்தணி முருகன் வாரியாரது சாரீரத்தை வானகத்தே வந்து ஈர்த்துச் செல்ல சரீரம் மட்டும் இந்தப் பூவுலகில் வந்திறங்கியது. "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று சுவாமிகள் ஒவ்வொரு தடவையும் கூறுவது போன்ற அந்தக் குகனது கழலடியில் சுவாமிகள் இரண்டறக் கலந்துவிட அவரது வெற்றுச் சரீரம் காங்கேய நல்லூரில் ஆகம முறைப்பிரகாரம் சமாதி வைக்கப்பட்டது. இந்தச் சமாதி நிலையம் கயிலை புனிதர் சாந்தலிங்க அடிகளாரால் தமிழ் வேள்வி நடாத்தப்பட்டு ஞானத் திருவளாகமாக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையமானது முருகனது ஆறு திருமுகங்களை சித்தரிக்கும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகோண வடிவத்தில் அமையப் பெற்றிருப்பதோடு ஆறுமுகப் பரம்பொருளின் திருவுருவமும் அமையப்பெற்றுள்ளது. முகப்பு மண்டபதில் நின்ற நிலையிலுள்ள வாரியார் சுவாமிகளது தங்க நிற உருவமும் கருவறையில் கருங்கற் திருவுருவமும் அமைக்கப்பெற்று சுவாமிகள் அணிந்திருந்த உருத்திராட்சமாலைகளும் அணிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமையப்பெற்ற இந்த ஞானத் திருவளாகத்தில் தினமும் அன்னதானப் பணிகளும் இதர ஆன்மீகப் பணிகளும் நிகழ்ப்பெற்று வருகின்றது.

**தொகுப்பாக்கத்திற்கான குறிப்புரை:**

இவ்வண்ணமாக முருக பிரானிடத்தும், அவரிடமிருந்து ஞானோபதேசம் பெற்றுய்த அருணகிரிநாதரின்மீதும் பேரன்பு பூண்டிருந்து முருக பணிகளையாற்றி வந்த வாரியார் சுவாமிகள் உரை செய்தருளிய திருப்புகழ்களின் சிறப்புக்களை இனிவரும் தொடர்களிலிருந்து அறிவோம்.

மனத்திடத்தோடும் தூய்மையோடும் எங்கெங்கெல்லாம் ஆன்மீகப் பணிகள் இடம்பெற்று வருகின்றதோ அங்கெல்லாம் இறையருளும் ஆன்றோரின் ஆசிகளும் நிறையப் பெற்றிருக்கும். இதற்கொப்ப சந்நிதியான் ஆச்சிரமத்தின் பூசைக்கூடத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளது ஐம்பொன்னாலான திருவுருவமும் எழுந்தருளப்பெற்றுள்ளது.

(தொடரும்...

---

ஒருமுறை இயற்பியல் ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களிடம் கேட்டார், "ஏன் வாகனங்களில் பிரேக்குகள் வைக்கப்பட்டுள்ளன?" பலவகையான மாறுபட்ட பதில்கள் கிடைத்தன. "நிறுத்துவதற்கு", "வேகத்தைக் குறைப்பதற்கு", "மோதலைத் தவிர்ப்பதற்கு", "மெதுவாகச் செல்வதற்கு", "சராசரி வேகத்தில் செல்வதற்கு" எனப் பல்வேறு பதில்கள் மாணவர்களிடம் இருந்து வந்தது. "வேகமாக ஓட்டுவதற்கு" என்ற பதிலை சொன்ன மாணவனை பார்த்து மற்ற மாணவர்கள் சிரித்தனர். அந்தப் பதிலே சிறந்த பதிலாக ஆசிரியரால் தெரிவுசெய்யப்பட்டது. ஆம் பிரேக்குகள் நாம் வேகமாகச் செல்வதற்காகத்தான் வைக்கப்பட்டுள்ளன. உங்கள் காரில் பிறேக்குகள் இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் காரை எவ்வளவு வேகமாக ஓட்டுவீர்கள்? நிச்சயமாக உங்களால் வேகமாக ஓட்ட முடியாது. பிரேக்குகள் இருப்பதனால் மட்டுமே நாம் விரும்பும் இடத்திற்கு வேகமாக செல்வதற்கான தைரியத்தைக் கொடுக்கிறது.

இதுபோலத்தான் தடைகள். தடைகள் வரும்போது அவைகள் நம் வாழ்க்கையின் வேகத்தை குறைக்க வந்ததாக நினைத்து நம் மனத்தை சுருக்கிக்கொள்கிறோம். தடைகள் எரிச்சலூட்டுவதுபோலவும் நமது நம்பிக்கைகளை சிதைப்பது போலவும் நினைத்துக் கொள்கிறோம். உங்கள் வாழ்க்கையில் வரும் "பிரேக்குகள்" உங்கள் வேகத்தை குறைப்பதற்கு அல்ல, வேகமாகச் செல்வதற்குத்தான். இதை நிதானமாக தாண்டிவிட்டால் பிறகு நாம் விரும்பிய இலக்கை இனிதே அடையலாம்.

*நம்பிக்கையற்றவன் எந்த உலகிலும் இன்பம் காணமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்







01) சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற் கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில், பட்டியோலை சுன்னாகத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு வைத்தியச் செலவுக்காக 50,000 ரூபா வழங்கப்பட்டது.

02) மருதங்கேணி பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக கிராமமட்ட சிறுவர் விளையாட்டு நிகழ்வுக்காக 50,000 ரூபா பெறுமதி யான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

03) பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்ட யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 30,000 ரூபா நிதி வழங்கப்பட்டதோடு, மாதாந்தம் 10,000 ரூபா வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே. கோபத்தை வெளிப்படுத்துமுன் யோசிக்க மறந்துவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா - வடகாடு, பிரமணாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக்கான 20 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.



உன் பலத்தோடு மோதுபவன் எதிரி. உன் பலவீனத்தோடு மோதுபவன் துரோகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாணம் - அம்பாறை மாவட்டத்திலுள்ள உமிரி பிரதேசத்தில் அமைந்துள்ள காயத்திரி அம்மன் ஆலய கட்டிடப் பணிக்காக 100,000 ரூபா நிதியும், இப்பிரதேசத்தில் உள்ள திருப்பதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான ஒருதொகுதி கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டது.



நீ ஏழையாகப் பிறப்பது உன் தவறில்லை. நீ ஏழையாக இறப்பதுதான் உன் தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாணம் - அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில், விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு 300,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.



தனக்கு நிகழும்வரை எல்லாமே வேடிக்கைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







புத்தளம் சேனைக்குடியிருப்பு, மணல் குன்று, அபயபுர, அரலியபுயன பிரதேசங்களில் வாழும் பல்லின சமூகங்களைச் சார்ந்த 80 குடும்பங்களைத் தெரிவுசெய்து 280,000 ரூபா பெறுமதியான அத்தியாசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊவா மாகாணம், மொனராகலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 195 மாணவர்களுக்கு 160,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



ஒருவர் துன்பப்படும்போது நிபந்தனை ஏதுமின்றி உதவுவதுதான் உண்மையான நட்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாத வடிவினனுக்கு ஒரு நாதாஞ்சலி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இன்று இவ்வினிய காலைப்பொழுதில் இசையும் இறையும் பற்றி சற்று உங்களுடன் ஐந்து நிமிடங்கள்!

இசை தெய்வீகமானது, புனிதமானது, தூய்மையானது, இன்பகரமானது. மனதின் கவலைகளைப் போக்க, மறக்கடிக்கவல்லது. இசை கேட்டு நாகமே இசைந்துவிடும். அவ்வாறாயின், நாம் எம்மாத்திரம்?

இசையோடு இறைவனை நோக்குமிடத்து, பெரும்பாலான பக்தர்கள் இறைவனைத் தம்மிசையால் இசைவாக்கியமையைக் காணலாம். உதாரணத்திற்கு வீணைக் கொடியோன், இலங்கேஸ்வரன், சுந்தர சுவாமிகள், தேன் பிளிற்றும் திருவாசகம் தந்த மணிவாசகர் என இவ்வண்ணம் கூறிக்கொண்டே போகலாம்.

தெய்வ வடிவங்களின் அழகுச் சிற்பங்களை நோக்கினால் தெய்வங்கள், மூர்த்திகள் கரங்களில் இசைக் கருவிகளைத் தரித்திருப்பதைக் காணலாம்.

சிவன் - முதலில் சிவனாரின் திரு உருவை எடுத்துக்கொள்வோம். சிவன் நாத வடிவினன், ஓசை ஒலி எல்லாம் ஆனவன். திருக்கரத்திலே உடுக்கையைப் பரித்துள்ளான்.

பஞ்ச கிருத்தியத்தில் உடுக்கு படைத்தல் தொழிலைக் குறித்து நிற்கின்றது. கலைமகள் வீணா வாணி, கலைகளின் அதிபதி, கல்வியின் உறைவிடம். அவளின் திருக்கரங்களை அலங்கரிப்பது நாதத்தைப் பொழியும் வீணா வாத்தியம். வீணை இசைக் கருவிகளின் அரசி என்று போற்றப்படுகின்றது. கிருஷ்ண பகவான், இவரது திருக்கரங்களை அழகுபடுத்துவது புல்லாங்குழல். வேணு, வேய்ங்குழல் அதன் இனிய கானத்தில் மயங்காத வர்களே இல்லை எனலாம். நாரத முனிவரின் கரங்களில் யாழ். எமது பாரம்பரிய இசைக்கருவி. இந்தவகையில் இசையும் இறையும் மிக நெருக்கம் கொண்டுள்ளன.

தும்புரு, நாரதர் இருவரும் தவ வலிமைமிக்க ரிஷிகள். இசை மேதைகள். ஒருமுறை இவர்களுக்கிடையே போட்டி ஒன்று எழுந்தது. அதாவது இசையில் தாமே பெரியவர் என்ற போட்டிதான்.

அப்போது அங்கு வந்த ஆஞ்சநேயர் இவர்கள் மத்தியில் தலையிட்டு இவர்களது போட்டிப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். எப்படி என்று பாருங்கள்.

ஆஞ்சநேயர் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆஞ்சநேய வணக்கம் இப்போது எம்மிடையே வலுவுற்றிருப்பமை கண்கூடு. ஆஞ்சநேயர் ஒரு சிறந்த இசை ஞானி. சங்கீதப் புலமையும், பரதநாட்டிய அறிவும் நிரம்பப் பெற்றவர். இவர் இயற்றியுள்ள இசை பற்றிய அகராதி ஒன்று உள்ளது. அதன் பெயர் “ஹனுமத் காடகம்”. இது மாத்திரமல்ல, பரத சாஸ்திரம் பற்றி, இவர் “ஹனுமத் பாரதம்” என்னும் நூல் ஒன்றையும் அருளிச் செய்துள்ளமை வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் ஆஞ்சநேயர், தும்புரு, நாரதர் இருவரும் தம்மிடையே இசை சம்பந்தமாகப் போட்டி போட்டுக்கொண்டு தம்முள் யார் இசையில் பெரியவர் என சர்ச்சைப் படுவதைக் கண்ணுற்றார். அவர்களது பிணக்கை தீர்த்து வைக்குமாறு அவர்கள் மத்தியில் சென்று அவர்களைச் சமாதானப்படுத்தி இரண்டு பெரிய பாறைகளைக் காட்டி அவற்றில் ஒவ்வொன்றிலும் அவர்களை அமரச் செய்தார். பின்னர் தாமே நடுவராக நடுவில் அமர்ந்து "குண்டகப்பிரியா" என்னும் ராகத்தை மிக அழகாக விரிவாக ஆலாபனம் செய்து பாடினார். ஆஞ்சனேயர் பாடப்பாட தும்புருவும், நாரதரும் அமர்ந்திருந்த பாறைகள் உருக ஆரம்பித்தன. சிறிது சிறிதாக பாறைகள் உருகி நீராக மறைய ஆரம்பிக்கவே தும்புரு, நாரதர் இருவருக்கும், தாம் தாம் இசையில் வல்லவர்கள் என்ற கர்வம் ஒடுங்கி அவர்கள் ஆஞ்சநேயரை புகழ்ந்து பாராட்டலாயினர்.

ஹனுமாருக்குப் பிடித்த இராகம் தோடி இராகமாகும். தோடி 72 மேள கர்த்தா இராகங்களுள் 8ஆவது ஸ்தானத்தில் அமைந்துள்ளது. இந்த இராகம் ஹனுமாரின் பெயரில் ஹனுமத்தோடி என்றழைக்கப்பெறுகின்றது.

மேலும் சைவ நாயன்மார்கள் காலத்திலும் பக்தி மார்க்கம் வளர, பக்தி நெறி தளைக்க இசையே பயன்பட்டது. ஞானசம்பந்தர் பெருமான் தலயாத்திரை செய்தபோது அவர் பாடியருளிய தேவாரப்பதிகங்களுக்கு திருநீலகண்டப் பெரும்பாணர் யாழ் வாசித்தார். ஒரு சந்தர்ப்பத்தில் ஞானக்குழந்தையின் அருளிசை அவரது இசைக்கருவியின் எல்லைக்குள் அடங்காமை கண்டு தனது யாழை முறிக்கவும் செய்தார். இதனால் தோன்றியதுதான் யாழ்முறிராகம். இது இப்போதும் யாழ்முறிராகம் என வழங்கப்படுகின்றது.

இந்த வகையில் இசை, அரவ இனத்தை மாத்திரம் ஈர்க்கவில்லை. அரவமணிந்த சாமகானப் பிரியனையும்தான் ஈர்க்கின்றது. எனவே குரல்வளமுடையோர் தயங்காது தவறாது இறைவனை இசைபாடி இன்னருள் பெறமுயற்சியுங்கள். ஏன் தயக்கம்!

---

## சிங்கம்போல் இருங்கள்

*ஒரு சிங்கம் ஒரு எலியைப் பிடிக்க முழுத்திறன் கொண்டதாக இருந்தாலும், ஒருபோதும் எலியைப் பிடிக்காது. உங்களால் முடியும் என்பதால், நீங்கள் அதைச் செய்ய வேண்டும் என்று அர்த்தமல்ல.*

*சிங்கத்திற்கு உணவளிக்க எலிகளுக்கு அதன் சிறிய உடலில் கிட்டத்தட்ட போதுமான புரதம் இல்லை. மேலும் எலியைத் துரத்தினால் வீணாக சிங்கத்தின் சக்தி வீணடிக்கப்படும். சிங்கங்கள் எலிகளை வேட்டையாடினால், அவை பட்டினியால் இறக்க நேரிடும். அதனால்த்தான் சிங்கம் எலிகளுக்குப் பதிலாக மற்றைய மிருகங்களை வேட்டையாடுகிறது.*

*சிறிய கனவுகளைத் துரத்தும் உங்கள் நேரத்தையும் சக்தியையும் செலவிடுவது உங்களைச் சோர்வடையச் செய்யும். மேலும் சோர்ந்துபோக வழிவகுக்கும். நீங்கள் விரைவில் தோற்றதுபோல் உணர்வீர்கள். இந்தக் கேள்வியை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.*

*நான் எலிகளைத் துரத்துவதில் பிஸியாக இருக்கிறேனா.... தங்கள் சரியான இலக்குகளை சீரமைக்க மற்றும் சென்றடைய நான் உதவுகிறேன். கட்டுப்படுத்தப்பட்ட நம்பிக்கைகளை உடைத்து சவால் செய்ய நான் உதவுகிறேன். இது சில தனித்துவமான மாற்றங்களுக்கு வழிவகுத்து வெற்றியை உங்களுக்கு வழங்கும்.*

***ஒருவன் சிரிக்கும்போதெல்லாம் மரணம் தள்ளிப்போடப்படுகிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலும் உள்ளமும்

– **திரு இராம ஜெயபாலன்** அவர்கள் –

பசிக்கின்றது அது உடலின் தேவை. அறிவை அறிவதில் ஆர்வம் ஏற்படுகின்றது. அது உள்ளத்தின் தேவை. பசிப்பதால் நாம் உணவை உண்ணுகின்றோம். சுவையை அனுபவித்து மகிழ்கின்றோம். அறிவை அறிவதில் ஆர்வம் ஏற்படுவதால் எமக்குள் சுவாரசியம் ஏற்படுகின்றது. மனதில் (உள்ளம்) மகிழ்கின்றோம். இந்தவகையில் நாம் சுற்றுலா செல் கின்றோம். இயற்கைக் காட்சிகளைப் பார்த்து மகிழ்கின்றோம். சுவையான உணவையும் உணர்கின்றோம். சுவையின்பத்தையும் அனுபவிக்கின்றோம். நாம் செல்வது ஆலயச் சுற்றுலாவாக இருந்தால் பக்தியின்பத்தையும் பாரம்பரியம் பற்றிய அறிவையும் அறிந்து மகிழ்கின்றோம். இவ்வாறு நாம் துயர்களையும் அனுபவத்தாலும் மாற்றீடாக மகிழ்ச்சிகளை அனுபவித்தும் நகைச்சுவை உணர்வுகளாலும் துயர்களைப் போக்கிக்கொள்ளவும் முயல்கின்றோம்.

எனவே உணர்வுகள் என்பது உடலின் தேவையாக இருந்தாலும், மகிழ்ச்சிகளையோ துயர்களையோ உள்ளம்தான் அனுபவிக்கின்றது. ஆனாலும் தாவரங்களுக்கு மூளை இல்லை. இதனால் தாவரங்கள் உணர்வினால் மட்டும்தான் உயிர்வாழ்கின்றன. உதாரணம் தாவரங்கள் உணர்வினால் சூரியனை நோக்கி வளர்வதும், நீர்நிலைகளை நோக்கி வேர்கள் போவதும் சான்றாகும். எனவே தாவரங்களுக்கு தலையில்லாது வெறும் தண்டாக இருந்தாலும் உணர்வு இருக்கின்றது. மனிதர்களுக்கும் முள்ளந்தண்டே உணர்வுகளை தீர்மானிக்கும் காரணியாக அமைகின்றது. எனவே முள்ளந்தண்டுதான் உணர்வுகள் உருவாவதற்கு காரணியாகவும் உடல் சமநிலையையும் முள்ளந்தண்டு எலும்புகள் வலுவாக்க உதவினாலும் சமநிலையைத் தீர்மானிப்பதற்கு மூளி என்ற மூளையின் பகுதியும் காரணமாக இருக்கின்றது. மேலும் மனிதர்கள் அறிவினால் வாழக்கூடியதாக இருந்தாலும் மனிதரல்லாத மற்றைய உயிரினங்கள் பரம்பரை அலகின் தீர்மானத்தால் பிறப்பினால் வரும் ஆற்றல்களால் உயிர் வாழ்கின்றன. எனவே உணர்வுகளின் பரிணாமம்தான் ஆற்றலாகவும் அறிவாகவும் பரிணாம வளர்ச்சியடைந்தது.

## படைப்பாற்றலும் இறைவனும்

இறைவனே அனைத்துப் படைப்பின் மூலங்களையும் தனது மாய சக்தியால் உருவாகச் செய்து அவை பரிணாம வளர்ச்சியடைவதற்கான விதியையும் வைத்து அவை தானாக உருவாகி, தன்னியக்க முறையில் இயங்கும்படி செய்துள்ளார். இதனால் இறைவன் பற்றிய அறிவு மனிதர்களுக்கு ஏற்பட இவையே காரணமாகவும் இருந்தது. எவ்வாறாயினும் இறைவன் அணுக்களைக்கூட நேரடியாகப் படைக்காது, அணுக்களையும்கூட உருவாகும் வண்ணமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்துள்ளமையால் மனிதர்களால் அணுக்களை உடைக்கவும், அணுக்களின் உருவாக்கங்களைக்கூட அறிய முடிகின்றது. இருந்தாலும் அறிவால் அறியமுடியாதவைதான் இறைவன் செயல் என ஆதிமனிதன் நம்பியமையால் இதன் தொடர்ச்சியாக அறிவால் அறியக்கூடியதாக இருந்தால் அது இறைவன் செயல் இல்லை என்ற மனநிலை மனிதர்களுக்கு இருந்தது. இவ்வாறு அறிவினால் அறியமுடியாத ஆற்றல்தான் இறைவன் என்று நம்பினார்கள். இறைவனை அறிவினாலும் அறிய முடியும் என்பது அறிவியல் வளர்ச்சியின் விளைவாகும். இந்தவகையில் இறைவன் மனிதர்களை படைப்புக்கள் எல்லாவற்றிலுமே உச்சமாகவும் உயர்வாகவும் படைத்தாலும் தனது சுய படைப்பாற்றலை மனிதரல்லாத உயிரினங்களிலேயே பிரதிபலிக்கச் செய்துள்ளார். உதாரணம், சிலந்தி தனது உடலில் இருந்தே மூலப்பொருள்களை உருவாக்கி தாமே தமது வாழ்விடங்களை அமைத்து வாழ்கின்றன. எனவே அறிவு மட்டும்தான் மனிதன் தனக்கு மூல (மூளை) வளம். மேலும் மனிதர்கள் தமது சுய தேடல்களால் மொழியறிவியல்களை தாமே உருவாக்கக்கூடியதாக இறைவன் மனிதர்களை பரிணாமத்தால் படைத்தாலும், தனது ஞானத்தை மனிதரல்லாத உயிரினங்களிலேயே சான்றாகப் பிரதிபலிக்கச் செய்துள்ளார். உதாரணம் மனிதரல்லாத உயிரினங்கள் மொழியறிவு கடந்த உணர்வுகளால் மட்டுமல்ல, புலன்கடந்த ஞானத்தாலும் தமது இரைகளை (உணவு) கண்களால் காணமுடியாத இடத்தில் இருந்தாலும் தமது மோப்பசக்தியால் தமது இரைகள் (உணவு) இருக்கும் இடங்களைத் துல்லியமாக உணர்ந்து, தவிர தமது சகாக்களுக்கும் ஒலியெழுப்பி உணரச்செய்து, ஒன்று சேர்ந்து மோப்பசக்தியை அடிப்படையாகக் கொண்டு இலக்கை அடைகின்றன. இன்று மனிதன் கூட கண்களால் காணமுடியாத இடத்தை இணையத்தில் கூகுள் வரைபடத்தின் உதவியால் சென்றடையக்கூடியதாக இருந்தாலும் மனிதனது அறிவியல் வளர்ச்சி பரிணாமம், மனிதர்கள் முதலில் கண்டுபிடித்து திசையறி கருவியையேயாகும். மனிதன் காடுகளுக்குள் பயணம் செய்யும்போதும் கடலில் பயணம் செய்யும்போதும் திசையறி கருவிகளையே முதலில் பயன் படுத்தினாலும் எமது முன்னோர்கள் வானில் தெரியும் சூரிய சந்திரர்களையும் நட்சத்திரங்களைக் கொண்டுமே காடுகளிலும் கடலிலும் பயணங்களைச் செய்தார்கள்.

### மரபணுவும் மனிதனும்

உயிரினங்கள் எல்லாமே மரபணுவை அடிப்படையாகக்கொண்டே உருவாகி இயங்குகின்றன. இறைவனால் பரிணாமத்தில் தீர்மானிக்கப்பட்ட விதியாகவே மரபணுக்கள் விளங்கினாலும் நேரடியாக இறைவன் இவற்றில் தலையிடுவதில்லை. உதாரணம் கருவில் இருந்து குழந்தை எவ்வாறு உருவாகின்றது என்பதை அறிவுபூர்வமாக அறிந்துகொள்வதற்கு முன் இறைவனே நேரடியாகத் தாயின் வயிற்றில் குழந்தையை வைக்கின்றார் என நம்பினார்கள். இவ்வாறு உடல் இயக்கங்கள் எமது அறிவுக்குத் தெரியாமல் இடைவிடாது இயங்கிக்கொண்டு இருப்பதால் இறைவனே நேரடியாக எமக்குள் இருந்து எமது உள்ளுறுப்புக்களின் இயக்கங்களை இயக்கிக்கொண்டு இருக்கின்றார் எனவும் நம்பினார்கள். எவ்வாறாயினும் இறைவனின் படைப்பின் விதியாக மரபணுவில் இருந்து மனிதன் உருவாகி, மனிதனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளந்தண்டின் இயல்பால் உடல் உள்ளுறுப்புக்கள் இயங்குவதுடன் முள்ளந்தண்டே உணர்வுகளையும் ஏற்படுத்துகின்றது.

## இயற்கையும் இறைவனும்

எமது வாழ்வியக்கங்களுக்கான காரணிகளை இயற்கை என்று அழைக்கின்றோம். முக்கியமாக பசி, காமம் மற்றும் பற்றுப் பாசம் இவை எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும், சந்ததிகளைப் பெருக்கி சந்ததிகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இயற்கையாகவே உருவாகின்ற உணர்வுகள் காரணம் மனிதரல்லாத உயிரினங்களுக்கும் இவ்வுணர்வுகள் உண்டு. தாவரங்கள்கூட சூரியனைநோக்கி வளர்வதும் தவிர நீர்நிலைகளை நோக்கி வேர்களை வளரச் செய்வது சான்றுகளாகும். மேலும் தாவரங்கள் அசைந்து இயங்க முடியாத உயிரினங்கள் என்பதால் இவைக்கு நோ, வலி மற்றும் மரண பயங்கள் இல்லை. இந்த இயற்கை உணர்வுகளை மனிதர்கள் பண்பாடாக மாற்றி உலகில் பல்வேறு வாழ்வு முறைகளைப் பின்பற்றி வாழ்கின்றார்கள். தவிர அவை அந்தந்த மனித சமூகங்களின் ஆழ்மனப் பதிவாகி அவையும் அந்தந்த மனித சமூக வாழ்வியக்கங்களுக்கும் காரணமாகவும் அமை கின்றது. மேலும் அந்தந்தச் சமூகம் பின்பற்றுகின்ற ஆன்மீக நம்பிக்கைகளுடன் கலந்து மீறப்பட முடியாத அறங்களாகவும்கூட போற்றப்படுகின்றன. இவ்வாறு இருந்தபோது முரண் பாடுகளும் இயற்கையின் இயக்கத்தில் காணப்படுவதால் மனிதர்கள் உட்பட உயிரினங்களுக்கு இன்ப துன்பங்கள் ஏற்பட்டன. அதாவது சுவையின்பம் புணர்வின்பம் மற்றும் பற்றுப்பாசம் மனிதர்களுக்கு அதிக துன்பங்கள் தருவதாக அமைந்தது.

இதனால் இயற்கையை வென்று வாழ்வதற்கே துறவறங்கள் உருவானது. இறைவனே இயற்கையைப் படைத்து, உயிரினங்களைப் படைத்து இயங்க வைத்தாலும் இறைவன் இந்தப் பூமியில் பிறக்காதபடியால் அவனுக்கு பசி தாகமோ பற்றுப்பாசமோ கிடையாது. மேலும் இறைவன் யாரிலும் தங்கி வாழவேண்டிய தேவையில்லாததால் அவனுக்கு மொழியறிவும் கிடையாது. மேலும் இறைவன் குணங்குறி ஏதும் இல்லாது நிர்மலனாகவும், நிர்க்குணனாகவுமே திகழ்கின்றான். இவ்வாறு இருந்தபோதும் மனிதருக்குள்ளும் இறைநிலை இருக்கின்றது. எவ்வாறு வீசும் புயலின் நடுவே அமைதியிருக்கின்றதோ அதுபோல் ஒளிரும் தீபத்தின் நடுவேயும் இருள் இருக்கின்றதுபோல் எமக்குள்ளும் இறைநிலையிருக்கின்றது. இதை அடைவதை நோக்கமாகக் கொண்டு துறவறம் உருவானாலும் இவர்கள் தமது உள்ளத்தை மட்டுமல்ல உடல் இயக்கங்களையும்கூட தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து சாதனைகள் செய்யும் சித்தர்களுமானார்கள்.

அதாவது எமது மூளையைப் பயன்படுத்தி சிந்தித்து, எம்மை நாம் இயக்கி இயங்கக் காரணமானபோதும் அதாவது கைகால்களை அசைத்து எம்மால் இயங்க முடிந்தாலும் எமது உடலின் உள்ளுறுப்புக்களின் இயக்கம் எமது அறிவின் கட்டுப்பாட்டில் இல்லாமல் தன்னியக்க முறையில் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. நாம் நித்திரை செய்யும்போதும் உடல் உள்ளுறுப்புக்கள் தொடர்ந்து இயங்குவதாலேயே நாம் உயிர் வாழ்கின்றோம்.

*வெற்றி பெறும் ஒவ்வொரு செயலும் ஒரு குறிக்கோளாக ஆகிவிடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எமக்கு ஏற்படுகின்ற மன அழுத்தங்கள் எமது உடலின் உள்ளுறுப்புக்களின் இயக்கங்களைகூட பாதிக்கின்றது. இதற்குக் காரணம் எமது உணர்வுகள் முள்ளந்தண்டில் இருந்தே உருவாகி மூளைக்கு உடல் தேவைகளின் செய்தியை எடுத்துச் செல்கின்றது. எமக்கு பசியேற்படுவதை அறியவைக்கின்றது. அதேநேரம் எமது மனமும் சுவையான சாப்பாட்டை உண்ணவேண்டும் என்று நினைக்கும்போது எமக்கு உணவில் விருப்பமேற்பட்டு பசியேற்படுகின்றது. இதேபோல் பய உணர்வும் எமது அடிவயிற்றில் இருந்து உருவாகி நெஞ்சு வழியாக தொண்டையை அடைந்து மூளைகது உணர்த்துவதற்கு உடலில் பதட்டங் களை ஏற்படுத்துகின்றது. அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்கின்ற இனிமையான பய உணர்வு இயற்கையாக உருவாகின்றது. இது காதல் உணர்வை வெளிப்படுத்துகின்றது. இது எமது உடலுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதில்லை. அதேநேரம் எமது மனதின் வழியாக பயம் ஏற்படுகின்றபோது அது உணர்வின் செயலை அதிகப்படுத்துகின்றது. உள்ளுறுப்புக்களைப் பாதிக்கின்றது.

தவிர எமது உடல் உள்ளுறுப்புக்களின் இயக்கத்தில் எமது அறிவு நேரடியாக தலையிட முடியாவிட்டாலும், மூச்சை சில நிமிடம் நிறுத்தி மீண்டும் மூச்சைவிட முடிகின்றது. எமது உடல் உள்ளுறுப்புக்கள் தனித்தனியாக இயங்கினாலும் அவைகளின் செயற்பாடு ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுவதால் சித்தர்கள் தமது உள்ளத்தை மட்டுமல்ல உடல் உள்ளுறுப்புக்களின் இயக்கங்களிலேயே தலையிட்டு சமநிலையில் வைத்திருந்து உணர்வு களால் ஏற்படும் பசி காமத்தை மட்டுமல்ல பய உணர்வுகளையும் கடந்து வாழ்ந் தார்கள். தவிர இதனால் அவர்களால் கூடுவிட்டு கூடு பாயும் சித்துக்களையும் செய்யமுடிந்தது. தவிர ஆன்ம நிலையில் தெய்வங்களாகி அடுத்தவர்களின் உடலில் ஏற்படும் நோய் நொடி களைக்கூட அவர்களால் சரிசெய்யவும் முடிந்தது. (தொடரும்...

## தன்னம்பிக்கை

நான் கடவுளிடம் கேட்டேன், என்னோட வாழ்க்கையை நான் எப்படி வழி நடத்துவது என்று. கடவுள் சொன்னார். உன் அறையில் பார் என்று. என் அறைக்குச் சென்றேன். எல்லாப் பதிலும் அங்கு எனக்குக் கிடைத்தது.

மேற்கூரை சொன்னது உன் எண்ணங்களை உயர்வாக வை என்று. காத்தாடி சொன்னது என்ன மாதிரி குளிர்ச்சியா இரு என்று. கடிகாரம் சொன்னது நேரத்தை மதிக்கனும் என்று. நாட்காட்டி சொன்னது என்னை மாதிரி உன்னையும் தினமும் புதுப்பித்துக்கொள் என்று. பணப்பை சொன்னது வருங்காலத்துக்காக சேமித்துக்கொள் என்று. கண்ணாடி சொன்னது உன்னை மட்டும் பார் என்று. விளக்கு சொன்னது என்னை மாதிரி அடுத்தவர் வாழ்வில் ஒளியேற்று என்று. யன்னல் சொன்னது பரந்த மனப்பான்மையாக இரு என்று. தரை சொன்னது எப்போதும் கீழே பணிவாக இரு என்று. படிக்கட்டு சொன்னது வாழ்க்கையில் ஒவ்வொரு படியிலும் ஏறும்போதும் கவனமாக அடி எடுத்துவை என்று. இதுபோல வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்து வந்தால் மிக உயர்ந்த நிலைக்கு வரலாம்.

*பொறுமையைக் கடைப்பிடிப்பவன் எல்லாவற்றையும் அடைவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்துக்குக் காப்புப் பாடல் உள்ளதா?

– திரு கெ. சித்திரவேலாயுதன் அவர்கள் –

ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு முன்னர் எனது வீட்டுக்கு அருகாமையில் உள்ள ஆலயம் ஒன்றில் திருவெம்பாவை காலத்தின்போது பத்து நாட்களுக்குள் எனக்கும் திருவெம்பாவை பாடல் ஓதுவதற்கு நிர்வாகத்தினரால் ஒரு நாள் ஒதுக்கித் தரப்பட்டு அங்கு அதிகாலைப் பூசையின் பின்னர் ஓதும் வாய்ப்புக் கிடைத்திருந்தது. உரிய நேரத்தில் ஆலய மண்டபத்தில் பிரசன்னமாயிருந்தேன். ஆலய குருக்கள் "திருவெம்பாவை அவதாரிக" என்று உள்மண்டபத்திலிருந்து கூறிவிட்டு ஆலயத்தில் பூசையில் வைக்கப்பட்டிருந்த திரு வெம்பாவைப் பாடல்கள் அடங்கிய புத்தகத்தை என் கரம் நீட்டினார். அதனைப் பயபக்தியுடன் வாங்கி வணங்கித் "திருச்சிற்றம்பலம்" சொல்லி "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியை ...." என்று ஆரம்பித்ததும் குருக்கள் குறுக்கிட்டு, "காப்பைச் சொல்லிப்போட்டுப் படியுங்கள்" என்றார். அதனைக் காதில் விழுத்தாதவன்போல் நான் தொடர்ந்தும் படித்தேன். மீண்டும் குருக்களின் குறுக்கீடு. இம்முறை சற்றே உரத்த தொனியில் அதே கட்டளை. "தொல்லையிரும் பிறவியைப் படித்துவிட்டுத் தொடங்குங்கோ" என்றார். அடியவர்கள் முன்னிலை யில் குருக்களின் கட்டளையை மீறக்கூடாதென்றும் அவருடன் வாதாட அது சந்தர்ப்பம் இல்லையென்றும் உணர்ந்துகொண்ட நான் "இது பெரும் தொல்லையாய்ப் போச்சே" என்று மனதில் எண்ணியவனாய் "தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி...." பாடிவிட்டு மீண்டும் "ஆதியும் அந்தமுமில்லா.........." தொடங்கி முடித்துவிட்டேன்.

மனதுக்குள் ஒரே உறுத்தல். விபூதி பிரசாதம் வாங்கிக்கொண்டு வெளியேறும்போது நான் படித்ததற்கு முந்திய ஒரு நாளில் படித்த ஒரு சைவப் புலவர் ஐயாவிடம் கதை கொடுத்தேன். "ஐயா திருவாசகத்துக்குக் காப்புப் பாடல் உள்ளதா?" என்று கேட்டேன். எனது கேள்வியின் நிதர்சனத்தை மனதாரப் புரிந்துகொண்ட அவர் நான் படிக்கத் தொடங்கி யதும் குருக்களின் குறுக்கீட்டைக் கவனித்ததாலோ என்னவோ, "காப்புப் பாடல் என்றில்லைத் தான்... ஆனாலும் காலம் காலமாக எல்லோரும் திருவெம்பாவை படிக்கத் தொடங்கும்போது "தொல்லையிரும் பிறவி..." படித்துத்தான் தொடங்குவது. அது மட்டுமல்ல பாடசாலைகளில் காலைக்கூட்டத்தின்போதும் மாணவர்கள் சிவபுராணம் படிக்கத் தொடங்க முதலும் "தொல்லையிரும் பிறவி... படித்துத்தான் தொடங்குவதைப் கேட்டிருப்பீர்கள்தானே" என்று நியாயப்படுத்த முயன்றார். எனினும் என்னால் அவரது கூற்றுக்களை ஜீரணிக்க முடியவில்லை.

என்னைப் பொறுத்தவரை எனது அறிவுக்கு எட்டிய வகையில் காப்புப் பாடல் என்பது ஒரு நூலாசிரியர் தனது நூலை ஆரம்பிக்க முதல் தனது நூல் குற்றம் குறையின்றி நல்லபடி அமைவதற்காகத் தானே இறைவனை வேண்டி இயற்றிப் பாடும் பாடலாகும். உதாரணத்துக்குக் கந்தபுராணத்தைப் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள், காப்புப் பாடலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகடசக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கரவின் மணியாவுறை
விகட சக்கரன் **மெய்ப்பதம் போற்றுவாம்.**

என்றும்,

உச்சியின் மகுடம் மின்ன ஒளிர்தரும் நுதலினோடை
வச்சிர மருப்பினொற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமாமுகங் கொண்டுற்ற
கச்சியின் விகடசக்கரக் **கணபதிக்கன்பு செய்வாம்.**

என்றும்,

விநாயகப் பெருமானைக் கச்சியப்பரே வேண்டிப் பாடி நூலை ஆரம்பிப்பதைக் காண முடிகிறதன்றோ?

இதுபோலவே யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. வரதபண்டிதர் அவர்கள் இயற்றிய பிள்ளையார் கதையிலும் காப்புப் பாடல்களாக,

கரும்பு மிளநீரும் காரெள்ளும் தேனும்
விரும்பு மவல் பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியே **இக் கதைக்குக்** காப்பு.

என்றும்,

திருவிளங்கு மான்மருகா சேவதனிலேறி
வருமரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானைமுகவா வுனைத்தொழுவேன்
**என் கதைக்கு** நீயென்றுங் காப்பு.

என்றும்

விநாயகப் பெருமானை விளித்து வேண்டி நூலை ஆரம்பிப்பதைக் காண முடிகிறதன்றோ?

இந்நிலையில் "தொல்லையிரும்பிறவிச் சூழும் தளை நீக்கி..." என ஆரம்பிக்கும் பாடல் திருவாசகத்தை அருளிச்செய்த மணிவாசகப் பெருமானால் இறைவனை வேண்டிப் பாடப்பட்ட பாடல் அல்ல. எனவே அது திருவாசகத்தின் காப்புப் பாடல் அல்ல.

மாறாக, அது திருவாசகத்தின் சிறப்பைப் பற்றி வேறொருவரால் பாடப்பட்ட அர்த்த புஷ்டி உள்ள மிகச் சிறந்த பாடலாகும். இந்தப் பாடல் மட்டுமல்ல மேலும் பின்வரும் பாடல்களும் திருவாசகச் சிறப்பினை விளக்குவனவாகும்

அருள் வாதவூரர் சொல அம்பலவர் தாமெழுதும்
திருவாசகத்தைத் தெளிந்தால் - கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரருளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

*நீங்கள் நிறுத்தாதவரை எவ்வளவு மெதுவாகச் சென்றாலும் பரவாயில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பாந்த காலங் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவாசகங் கொண்டுரைத்த தமிழ்மாலைத்
திருவாசக மென்னுந் தேன்.

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம்பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை - ஓதிப்
பிறவிப் பிணி நீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

மேலும்,

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரணமொழியோ
ஆதி சீர் பரவும் வாதவூரண்ணல்
மலர் வாய்ப்பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவாசகமிங் கொருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்து நீர் பாய
மெய்ம்மயிர்ப் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் அற்றையர் இலரே.

-சிவப்பிரகாச சுவாமிகள்.

வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால் கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே.

-இராமலிங்க சுவாமிகள்.

இவ்வாறு திருவாசகத்தின் சிறப்பைப் பற்றிப் பல்வேறு விதமாகப் பல்வேறு கவிஞர்கள் பல்வேறு காலங்களில் பாடியுள்ளார்கள். இப்படிப் "பத்தோடு ஒன்று பதினொன்று" என்றாற் போலத்தான் "தொல்லையிரும்பிறவிச் சூழுந் தளை நீக்கி..." என வரும் பாடலும்.

*நீ நடந்துபோக பாதை இல்லையே என்று கவலைப்படாதே. நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எக்காரணம் கொண்டும் இதனைத் திருவாசகத்தின் காப்புப் பாடல் எனக் கொண்டு திருவெம்பாவையையோ அல்லது சிவபுராணத்தையோ படிக்கத் தொடங்கமுதல் காப்புப் பாடல் என்று முத்திரை குத்திப் பாடுவதும் பாடப் பணிப்பதும் பொருத்தமற்றது என்பதே அடியேனின் தாழ்மையான கருத்தாகும். இதேவேளை திருவெம்பாவையையோ அல்லது சிவபுராணத்தையோ படித்து முடித்தபின் "தொல்லையிரும்பிறவி...." என வரும் திருவாசகத்தின் சிறப்பைக் கூறும் பாடலைப் படிப்பதில் தவறேதும் இல்லை என்பதையும் குறிப்பிட விரும்பு கிறேன். மேற்கூறிய எனது கருத்துக்களைச் சைவப் பேரறிஞர்கள் உள்வாங்கித் தங்கள் அபிப்பிராயங்களை அடுத்த மாத இதழில் வெளிவரச் செய்யவேண்டும் எனக் கேட்டு நிறைவு செய்கிறேன்.

## மெய் வருந்த பணி செய்த....

1988ஆம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பித்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற இடர்பாடுகள் காரணமாக ஆச்சிரமப் பணிகளை முன்னெடுத்துச் செல்வது பெரும்பாடாகவே இருந்தது. அந்த நேரத்தில் நெல்லியடியில் வர்த்தகர்களாக இருந்த திரு சு. சண்முகசுந்தரம் (செல்லமுத்தூஸ்), திரு நா. தெய்வேந்திரம் (இந்திரா கபே), சமீபத்தில் அமரர்களாகிய ஐ. சிவநாதன் (மருதம்) அவர்களோடு கடந்த வாரம் அமரத்துவமடைந்த இ. புவனேந்திரராஜா (பிள்ளையார் அரிசி ஆலை) ஆகியவர்களின் பங்களிப்புடன் ஆச்சிரம பணிகளில் ஒன்றான அன்னதானப்பணியை ஓரளவேனும் சிறப்பாகச் செய்யக்கூடியதாக இருந்தது. இவர்கள் அனைவரினதும் ஆச்சிரமத்தோடு ஈடுபாடுகொண்ட செயற்பாடுகள் ஒன்றையொன்று விஞ்சக் கூடிய வகையில் என்றும் நினைவு கூரத்தக்கதாகவும் அமைந்திருந்தது.

குறிப்பாக அமரர் ஐ. சிவநாதனும், அமரர் இ. புவனேந்திரராஜாவும் அரிசி ஆலை உரிமையாளர்களாக இருந்த காரணத்தால் மனமுவந்து அவர்களால் வழங்கப்பட்ட அரிசியின் மூலம் அன்னதானப் பணியை சிறப்பாகச் செய்யக்கூடியதாக இருந்தது. அதனடிப்படையில் கடந்த வாரம் அமரத்துவமடைந்த புவனேந்திரராஜா அவர்கள் தனது வாழ்வில் பலவிதமான ஏற்றத்தாழ்வுகளைக் கண்டபொழுதிலும் மனம் கலங்காது உறுதியுடன் நின்று தனது குடும்பத்தினரையும் சமூகத்திற்காகிய சேவைகளையும் முன்னின்று செயலாற்றியவர். அவரது இறுதிக் காலங்களில் உடல் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் மனத்தைரியத்தோடும், உறுதி யோடும் நின்று ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் நித்திய அன்னப்பணிக்கு தாமும் இணைந்து தன்னோடு இணைந்த அன்பர்களையும் உள்வாங்கி செயலாற்றிய ஒரு பெருந் தகையாவார். தான் அமரத்துவம் அடையும் காலம் வரையும் தன்னால் முடிந்த அளவு தனது பணியை மேற்கொண்டவர்களில் ஒருவர்.



அவர் அமரத்துவமடைந்த செய்திகேட்டு நாம் மிகவும் மனம் கலங்குவதோடு அவரது ஆத்மா சந்நிதி வேலவனது பாதத்தில் சாந்திபெற வேண்டி நிறைவு செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*வருந்தாதே! எதை இழந்தாலும். அது இன்னொரு வடிவில் வந்து சேரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

07.03.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "தீக்கூர்ந்த திருமேனியான்"

வழங்குபவர் :- திரு த. விஜயகுமார் அவர்கள்

[அதிபர் - துன்னாலை தெற்கு அ.த.க. பாடசாலை]

---

14.03.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

21.03.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

28.03.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் பங்குனி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

[இளை. அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு நி. பாபுதரன் அவர்கள்

[ஆசிரியர்]

327 ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org